# சிலாங்கூர்

இன்று

இலவசம்

SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

SMART SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2053 / சுபகிருது வருடம் வைகாசி மாதம் மே 5 / 2022 May 5 /2022

## அரசின் சுகாதாரத் திட்டங்களை

## மக்களுக்கு அறிமுகப்படுத்த மாநிலம் முழுவதும் பயணம்

### – மந்திரி புசார் தகவல்

**ஷா ஆலம்-**

**சிலாங்கூர் அரசின் சுகாதாரத் திட்டங்களை மக்களுக்கு அறி முகப்படுத்துவதற்காக நோன்புப் பெருநாளுக்குப் பிறகு மாநிலம் முழுவதும் பயணம் மேற் கொள்ளப் படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.**

பெருங்குடல் மற்றும் மார்பக புற்றுநோய், இருதயம், கண் புரை ஆகிய நோய்கள் தொடர்பான பரிசோதனைகளையும் இத்திட்டம் உள்ளடக்கியுள்ளதாக அவர் சொன்னார்.

மக்களிடம் முன்வைக்க வேண்டிய சில சிறப்பு மருத்துவ பராமரிப்புத் திட்டங்கள் குறித்து மாநில ஆட்சிக்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எனக்கு தெரிந்து வரை இந்த அளவுக்கு முழுமையான சுகாதார பராமரிப்பு திட்டங்களைக் கொண்ட மாநில அரசாங்கமோ மத்திய அரசாங்கமோ தென்கிழக்காசியாவில் இல்லை என்று நேற்று தனது அதிகாரத்துவ இல்லத்தில் நடைபெற்ற கெஅடிலான் கட்சியின் நோன்பு துறப்பு நிகழ்வில் உரையாற்றிய போது அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கெஅடிலான் கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம், பொதுச் செயலாளர் டத்தோஸ்ரீ சைபுடின் நசாத்தியோன் இஸ்மாயில், உதவித் தலைவர் தியான் சுவா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். மக்கள் மத்தியில் இலவச தொற்றா நோய் சோதனைத் திட்ட அமலாக்கத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று பொது சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் முன்னதாக கூறியிருந்தார். இருதய சிகிச்சை, காச நோய் மற்றும் சிலிம் சிலாங்கூர் ஆகிய மூன்று திட்டங்களின் அமலாக்கத்திற்கு கடந்த 2022 ஆம் ஆண்டிற்கான மாநில வரவு செலவுத் திட்டத்தில் 61 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தவிர மேமோ கிராம், புரோஸ் டெட், கர்ப்பப்பை வாய் புற்று நோய், பெருங்குடல் புற்றுநோய் சோதனை களை மேற்கொள்வதற்கு மேலும் 10 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## மக்கள் சுயகாலில் நிற்பதை ஊக்குவிக்கும் ஐ.எஸ்.பி. திட்டம்

### – நோன்புப் பெருநாளுக்கு பின்னர் தொடங்கும்



கோம்பாக்–

பல்வேறு நடவடிக்கைகள் வாயிலாக மக்களுக்கு உதவுவதை நோக்கமாக கொண்ட இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் (ஐ.எஸ்.பி.) எனப்படும் பரிவுமிக்க சிலாங்கூர் அர்ப்பணிப்புத் திட்டம் நோன்புப் பெருநாளுக்குப் பின்னர் தொடங்கப்படும்.

மக்கள் மாநில அரசை சார்ந்திராமல் சுயகாலில் நிற்பதற்கு ஏதுவாக அவர்களின் ஆக்கத் திறனை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு உதவிகளை இத்திட்டம் உள்ளடக்கியுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். கடந்த 2008 ஆம் ஆண்டில் நாம் மாநிலத்தின் வளங்களை மக்களுடன் பகிர்ந்து கொண்டோம். 2013 ஆம் ஆண்டில் கேட்டதை கொடுத்ததன் மூலம் மக்களுக்கு நாம் உதவினோம். 2018 இல் ஒவ்வொரு திட்டத்திலும் மக்களின் ஆற்றலை மெருகூட்ட விரும்புகிறோம் என்றார் அவர்.

நேற்று இங்குள்ள ஸ்ரீ சியாந்தான் மண்டபத்தில் நடைபெற்ற கோம்பாக் தொகுதி கெஅடிலான் தலைவர்களுடனான சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஐ.எஸ்.பி. திட்டத்தின் வழி அதிகமான மக்கள் பலன் பெறுவர். கிஸ் எனப்படும் பரிவுமிக்க அன்னையர் திட்டத்திற்கு மாற்றாக அறிமுகப்படுத்தப்படும் சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டத்தின் (பிங்காஸ்) வழி சுமார் 30,000 பேர் பயன்பெறுவதற்குரிய வாய்ப்பும் கிட்டும் என்று அவர் சொன்னார்.

முன்பு துனாஸ் திட்டத்தை அமல்படுத்தினோம். இப்போது அனிஸ் திட்டத்தை உருவாக்கியுள்ளோம். இந்த அனிஸ் திட்டத்தின் வழி சமூக நல இல்லங்களை கண்காணிக்கவும் பராமரிப்பாளர்களை பயிற்றுவிக்கவும் இயலும். இதன் மூலம் சிறார் சித்திரவதை சம்பவங்களைத் தவிர்க்க முடியும் என்றார் அவர்.

பக்கம் 7 சிலாங்கூர் இந்தியச் சமூகத் தலைவர்கள் சேவைகளையும்மதித்து வெ.1000 உதவித்தொகை

பக்கம் 11 சுபாங் ஜெயா, துன் சம்பந்தன் (வாவாசான்) தமிழ்ப்பள்ளி வேற்று மொழிப் பள்ளிகளுக்கு மத்தியில் மாற்று குறையாத தமிழ்ப்பள்ளி

பக்கம் 15 தொழிலாளர் தினச் சிறப்பு கட்டுரை

# நாட்டில் 424,000 சிறார்களுக்கு மனநலப் பாதிப்பு - மனநலச் சங்கம் அம்பலம்



கோலாலம்பூர்–
நாட்டில் 424,000 சிறார்கள் மனநலப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது 2019 ஆம் ஆண்டு சுகாதாரம் மற்றும் நோய்ப் பீடிப்பு மீதான ஆய்வில் தெரியவந்துள்ளது. நாட்டிலுள்ள சிறார்களிடையே மன நலப் பிரச்னை ஒரு தொற்று நோயாக உருவெடுத்து வருவதை பிரதிபலிக்கும் வகையில் இந்த உயர்ந்த பட்ச எண்ணிக்கை அமைந்துள்ளது.

உலகில் 20 விழுக்காட்டுச் சிறார்கள் மன நலப்பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதோடு அவர்களில் பெரும்பாலோருக்கு அந்நோய் இருப்பது தெரியாமலும் அதற்கான உரிய சிகிச்சை வழங்கப்படாமலும் இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது என்று மலேசிய சிறார் மற்றும் இளையோர் மன நலச் சங்கம் கூறியது.

சுமார் 50 விழுக்காட்டு மனநலப் பாதிப்புகள் 14 வயதை அடைவதற்கு முன்னர் ஏற்படும் வேளையில் 75 விழுக்காட்டினருக்கு 20 வயதை அடையும் போது ஏற்படுகின்றன என்று உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகள் காட்டுகின்றன என்று அச்சங்கம் தெரிவித்தது. 23 ஆம் தேதி அனுசரிக்கப்பட்ட உலக குழந்தைகள், சிறார்கள் மற்றும் இளையோர் மனநல ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் இச்சங்கம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

மனநல ஆரோக்கியம் பச்சிளங் குழந்தையாக இருக்கும் போதே தொடங்கப்பட வேண்டும். தரமான சுற்றுச்சூழலை உருவாக்குவதன் மூலம் தங்கள் பிள்ளைகளின் மன ஆரோக்கியத்தில் பெற்றோர்கள் முக்கிய பங்கினை ஆற்ற வேண்டும் என அந்த சங்கம் வலியுறுத்தியது.

# 60 வயது மேற்பட்டவர்களுக்கும் நோய்த்தொற்றுக்கு எளிதில் இலக்காக கூடியவர்களுக்கு

## இரண்டாவது பூஸ்டர் டோஸ்

ஷா ஆலம்–
ஒன்றுக்கும் மேற்பட்ட நோய்கள் கொண்ட 60 வயது வயது மேற்பட்டவர்கள் மற்றும் அதிக ஆபத்தில் உள்ளவர்கள் இரண்டாவது பூஸ்டர் டோஸ் பெற விருப்பம் அளிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கூறினார்.

முதல் பூஸ்டர் டோஸுக்குப் பிறகு நான்கு முதல் ஆறு மாதங்களுக்குள் மறு பூஸ்டர் டோஸ் எடுக்கப்படலாம் என்றும் மைசெஜாத்ரா மூலம் முன்பதிவு மற்றும் சந்திப்பு செயல்முறை விரைவில் அறிவிக்கப்படும் என்றும் கைரி ஜமாலுதின் கூறினார். "இந்த இரண்டாவது பூஸ்டர் டோஸ் கட்டாயமில்லை மற்றும் இது விருப்பமானது. 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் ஆரோக்கியமாக உள்ளவர்கள் மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட நோய்கள் இல்லாதவர்கள், மருத்துவர்களுடன் கலந்தாலோசித்த பிறகு, அவர்கள் இரண்டாவது பூஸ்டர் டோஸைப் பெறலாம், "என்று அவர் இன்று நாடாளுமன்றத்தில் செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.



சுகாதார இயக்குநர் ஜெனரல் டான்ஸ்ரீ டாக்டர் நோர் ஹிஷாம் அப்துல்லாவும் உடனிருந்தார்.

முதல் பூஸ்டர் டோஸைப் பெற்ற 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள், ஆனால் கோவிட் -19 நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்கள் குணமடைந்த மூன்று மாதங்களுக்குள் இரண்டாவது பூஸ்டர் டோஸைப் பெற முடியும் என்று அவர் கூறினார்.

# மே 12 ஆம் தேதி அன்வார்-நஜிப் விவாதம் - மலாயா பல்கலைக்கழகத்தில் நடைபெறும்




ஷா ஆலம்–
எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமிற்கும் முன்னாள் பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக்கிற்கும் இடையிலான பொது விவாதம் வரும் மே மாதம் 12 ஆம் தேதி நடைபெறும்.

இந்த விவாதம் மலாயா பல்கலைக்கழக வேந்தர் துங்கு மண்டபத்தில் இரவு 9.00 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கெஅடிலான் கட்சியின் தொடர்பு பிரிவு இயக்குநர் ஃபாமி ஃபாட்சிலும் தேசிய முன்னணி தகவல் பிரிவுத் தலைவர் இஷாம் ஜாலிலும் இன்று வெளியிட்ட கூட்டறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதம் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியிருக்கும். இதில் முதலாவது பிரிவு நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனமான சப்புரா எனர்ஜியின் நிலை மற்றும் அதனை காப்பாற்றுவதா? இல்லையா? என்பது பற்றியதாகும்.

பொருளாதாரம், அரசியல் மற்றும் நாட்டை நிர்வகிக்கும் முறையை உட்படுத்திய மலேசியாவின் எதிர்காலம் தொடர்பான விவாதத்தை இரண்டாவது பிரிவு உள்ளடக்கியிருக்கும். மூன்றாவது பிரிவில் கேள்வி பதில் அங்கம் இடம் பெறும். என்று அந்த அறிக்கை தெரிவித்தது.

### அரசு ஊழியர்களுக்கு சிறப்பு உதவித் தொகையாக

# ஒரு மாதம் சம்பளம்

**மந்திரி புசார் அறிவிப்பு**



ஷா ஆலம்–

அரசு ஊழியர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அவர்களுக்கு மாநில அரசு ஒரு மாத சம்பளத்தை சிறப்பு உதவித் தொகையாக வழங்கும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார். இந்த சிறப்பு உதவித் தொகை திட்டத்திற்காக 3 கோடியே 90 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், நோன்பு பெருநாளுக்கு முன்னதாக அதாவது ஏப்ரல் 27 ஆம் தேதி வழங்கப்படும் என்றார்.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு இங்குள்ள ஜூப்ளி பேராக் அரங்கில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

# சிலாங்கூர் தொழில்திறன் மையம் ஷா ஆலமில் அமைக்கப்படும் - மந்திரி புசார் தகவல்

கோல சிலாங்கூர்

சிலாங்கூர் தொழில்திறன் மேம்பாட்டு மையத்தை (எஸ்.டி.டி.சி.) ஷா ஆலம், செக்சன் 7 இல் இவ்வாண்டு மத்தியில் மாநில அரசு தொடங்கவுள்ளது.

மாநிலத்திலுள்ள தொழில் துறைகளுக்கு தற்போது மிகவும் தேவைப்படக்கூடிய உயர் திறன்மிக்க மனித ஆற்றலை உருவாக்கும் நோக்கில் தொழிலாளர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்குவதை இந்த மையம் நோக்கமாக கொண்டுள்ளது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

கோல சிலாங்கூரில் உள்ள தொழில் திறன் மையம் தொடக்க நிலையிலும் அன்றாட தேவைகளுக்கான பயிற்சிகளை வழங்குவதிலும் கவனம் செலுத்துகிறது. ஆனால் ஷா ஆலமில் அமைக்கப்படும் இம்மையம் தொழில் திறன் மற்றும் உயர் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் பயிற்சி வழங்கும் என்றார் அவர்.



இத்திட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினருடன் தாங்கள் விவாதித்து வருவதாகவும் இதன் தொடர்பான முழு விபரங்கள் ஜூன் அல்லது ஜூலை மாதம் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கோல சிலாங்கூர் எஸ்.டி.டி.சி. மையத்தில் நேற்று 330 மாணவர்கள் மற்றும் பணியாளர்களுடன் நோன்பு துறந்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார்.

எம்.பி.ஐ. எனப்படும் சிலாங்கூர் மந்திரி புசார் கழகத்தின் ஏற்பாட்டு ஆதரவில் செயல்படும் தொழில் கல்வி மையமாக இந்த எஸ்.டி.டி.சி. விளங்குகிறது.

கோல சிலாங்கூரில் செயல்பட்டு வந்த அனைத்துலக இன்பென்ஸ் கல்லூரி கடந்த 2020 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எஸ்.டி.டி.சி என பெயர் மாற்றம் கண்டது.

# வெள்ளத்திற்குப் பிறகு மாநிலத்தை மீட்க கடினமாக உழைத்த இளைஞர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் எம்பி பாராட்டு



ஷா ஆலம்–

கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட வெள்ளத்திற்குப் பிறகு சிலாங்கூர் மீண்டு வருவதற்கு இளைஞர்கள் முக்கியப் பங்காற்றியுள்ளனர் என்று டத்தோ மந்திரி புசார் கூறினார்.

டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, இளைஞர்களின் ஈடுபாட்டைத் தனது தரப்புபாராட்டுகிறது,இது மாநிலத்தை விரைவாகப் பிரச்சினைகளிலிருந்து விடுபட உதவியது, குறிப்பாக வெள்ளத்திற்குத் தொடர்பான பிந்தைய கால தன்னார்வச் செயல்பாடுகள். “50,000 க்கும் குறைவான தன்னார்வத் தொண்டர்கள் 60 விழுக்காடு இளைஞர்களைக் கொண்டுள்ளனர், அவர்கள் பேரழிவு வெள்ளம் ஏற்பட்ட ஒரு மாதத்திற்குள் எங்களுக்கு விரைவாக உதவினார்கள்.

“சிலாங்கூர் மக்கள் வெள்ளத்தின் பேரதிர்ச்சியில் இருந்து வெளியே வந்து தங்கள் வாழ்க்கையைத் தொடர முடிகிறது, இதற்கு சம்பந்தப்பட்ட இளைஞர்கள் ஓரளவு பங்களித்திருக்கிறார்கள்,” என்று அவர் இன்று கூறினார். டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இங்குள்ள மந்திரி புசாரின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் இளைஞர்களுடன் நோன்பு துறக்கும் நிகழ்ச்சியில் பேசினார்

வெள்ளத்தை எதிர்கொள்ளும் போது இளைஞர்களின் அர்ப்பணிப்பு, ஏற்படக்கூடிய பல்வேறு சாத்தியக்கூறுகளை எதிர்கொள்ள அவர்கள் தயாராக இருப்பதைக் காட்டுகிறது என்றார்.



# யாயாசான் சிலாங்கூர் ஆதரவில் கல்வியைத் தொடர 318 வசதி குறைந்த மாணவர்களுக்கு வாய்ப்பு

ஷா ஆலம்

யாயாசான் சிலாங்கூர் அறவாரியத்தின் ஏற்பாட்டில் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 318 முதலாம் படிவ மாணவர்கள் 2022/2023 பள்ளித் தவணையில் கல்வியைத் தொடர்வதற்குரிய வாய்ப்பினை பெற்றுள்ளனர்.

சிலாங்கூர் மாநிலத்தில் வசிக்கும் மாதம் 2,000 வெள்ளிக்கும் குறைவாக வருமானம் பெறக்கூடிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த திட்டத்தில் வாய்ப்பு வழங்கப்படுவதாக யாயாசான் சிலாங்கூர் அறிக்கை ஒன்றில் கூறியது. ஆறாம் ஆண்டு வகுப்பு நிலையிலான மதிப்பீட்டு தேர்வில் அனைத்து பாடங்களிலும் குறைந்தது டி.பி.3 எனப்படும் மூன்றாம் நிலை மதிப்பீட்டு புள்ளிகளைப் மாணவர்கள் பெற்றிருப்பது அவசியம் என்று அது தெரிவித்தது. இந்த திட்டத்திற்கு இம்முறை 3,838 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

அனைத்து விண்ணப்ப பரிசீலனை நடைமுறையாவும் இயங்கலை வாயிலாகவே மேற்கொள்ளப்பட்டது என்றும் அவ்வறிக்கை குறிப்பிட்டது. கூட்டரசு பிரதேசம் கோலாலம்பூரில் உள்ள பள்ளிகளில் சேரும் மாணவர்கள் ஏப்ரல் 4 ஆம் தேதியும் சிலாங்கூரிலுள்ள பள்ளிகளில் சேரும் மாணவர்களும் ஏப்ரல் 11 ஆம் தேதியும் பதிவு செய்ய வேண்டும்.

யாயாசான் சிலாங்கூர் அறவாரியத்தின் ஏற்பாட்டு ஆதரவைப் பெற்ற மாணவர்கள் தங்கும் விடுதி, உபகாரச் சம்பளம், கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தில் பங்கேற்க வாய்ப்பு உள்ளிட்ட சலுகைகளைப் பெறுவர்.

# வெ.250,000 விலையில் புக்கிட் ஜெலுத்தோங்கில் வீடமைப்புத் திட்டம்



ஷா ஆலம்–

முதல் வீட்டை வாங்க விரும்பும் மக்களின் கனவை நனவாக்கும் வகையில் இங்குள்ள புக்கிட் ஜெலுத் தோங், செக்சன் யு8 பகுதியில் மேலும் ஒரு ரூமா இடாமான் வீடமைப்புத் திட்டத்தை மாநில அரசு உருவாக்கவுள்ளது.

மூன்று அறைகள், இரண்டு குளியலறைகளுடன் 1,000 சதுரஅடி பரப்பளவு கொண்ட இந்த வீடு 250,000 வெள்ளி விலையில் விற்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த வீடு அனைத்து அறை களிலும் குளிசாதன வசதி, உடை வைக்கும் அலமாரி, சமையல் கேபினட், குளிர்பதனப் பெட்டி மற்றும் 32 அங்குல தொலைக்காட்சி ஆகிய அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

அதோடு மட்டுமின்றி இரண்டு குளியலறைகளிலும் நீரை சூடுபடுத்தும் ஹீட்டர் கருவி பொருத்தப் பட்டிருக்கும், மேலும், ஒவ்வொரு வீட்டிற்கும் இரு கார் நிறுத்துமிட வசதி செய்து தரப்படும். சுகந்தமான காற்றைச் சுவாசிப்பதற்கும் அழகிய காட்சிகளைக் கண்டு களிப்பதற்கும் ஏதுவாக இவ்வீடுகளில் பால்கனி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வீடுகள் நகர்ப்புறத்தில் கட்டப் பட்டாலும் அனைத்து வசதிகளுடன் கட்டுப்படி விலையில் இவை விற்கப்படுகின்றன. கிள்ளான் பள்ளத்தாக்கு பகுதியில் இந்த விலைக்கு இனியும் வீடு கிடைக்காது என்பதை உறுதிப்பட கூறுகிறேன் என்றார் அவர்.

நாடி செர்காஸ் எனும் பிரசித்தி பெற்ற நிறுவனம் இந்த வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்வதாக கூறிய அவர், நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ள இந்த வீடமைப்புத் திட்டம் போக்குவரத்து, கல்வி, மார்க்கெட் போன்ற வசதிகளையும் கொண்டுள்ளது என்றார்.

இந்த வீடுகளை வாங்க விரும்புவோர் www.platselangor.com அல்லது www.rumahidamanbukitjelutung.com என்ற அகப்பக்கத்தை வலம் வரும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

## பிகேஎன்எஸ் அதிக மலிவு விலை வீடுகளை உருவாக்க நோக்கம் கொண்டுள்ளது

ஷா ஆலம்–

சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகம் (பிகேஎன்எஸ்) ஒவ்வொரு ஆண்டும் 1,000 யூனிட் மலிவு விலை வீடுகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அந்தரா கபி மற்றும் சியாரா ஆலம் உள்ளிட்ட பல பகுதிகளில் இந்த ஆண்டு தொடக்கத்தில் 600 யூனிட்கள் கட்டப்படும் என்று அதன் தலைமை செயல் அதிகாரி தெரிவித்தார்.

"ஒவ்வொரு ஆண்டும் 1,000 மலிவு விலை வீடுகளே எமது இலக்கு, அதனை அடைய ஆரம்பத்தில் ஆண்டுதோறும் 500 முதல் 600 யூனிட்களையாவது உருவாக்க திட்டமிட்டுள்ளோம்.

"அதன் தொடர்பில் சைபர்ஜெயாவில் 800 மலிவு விலை வீடுகளுக்கான சாவி ஒப்படைப்பு விழாவை மே மாதம் நடத்துவோம்" என்று டத்தோ மாமூட் அப்பாஸ் கூறினார்.

மக்கள் தங்கள் முதல் வீட்டை சொந்தமாக்குவதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, செக்சென் ரு8 புக்கிட் ஜெலுதோங்கில் உருவாக்கப்படும் மற்றொரு ரூமா இடமான் திட்டத்தை மாநில அரசு கொண்டுள்ளது.

அந்த திட்டத்தில் 1,260 யூனிட்களின் கட்டுமானத்தில், ஒவ்வொரு வீடும் 1,000 சதுர அடி பரப்பளவைக் கொண்டிருக்கும், மூன்று படுக்கையறைகள் மற்றும் இரண்டு குளியலறைகளைக் கொண்டுள்ளது மற்றும் சுஆ250,000 விலையில் விற்கப்படவுள்ளதாக டத்தோ மந்திரி புசார் கூறினார். ஒவ்வொரு அறையிலும் குளிரூட்டி, ஒரு அலமாரி மற்றும் சமையலறை அலமாரிகள், ஒரு குளிர்சாதன பெட்டி மற்றும் 32 அங்குல ஒரு தொலைக்காட்சி ஆகியவை கொண்டிருக்கும் என்றும் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி விளக்கினார்

# தாமான் புக்கிட் பெர்மாய் நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்கள் வெ.135,000 நிதியுதவி பெற்றனர்




அம்பாங்–

தாமான் புக்கிட் பெர்மாய் 1 மற்றும் 2 இல் ஏற்பட்ட நிலச்சரிவு சம்பவத் தால் பாதிக்கப்பட்ட மொத்தம் 91 குடும்பங்களுக்கு 135,000 வெள்ளி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

அந்த உதவி நிதியில் 100,000 வெள்ளி எம்பி.ஐ. எனப்படும் மந்திரி புசார் கழகத்தின் வாயிலாகவும் எஞ்சிய 35,000 வெள்ளி மாநில பேரிடர் நிதியிலிருந்தும் வழங்கப்பட்டது என்றும் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இரண்டு வாரங்களுக்கு முன் நடைபெற்ற மாநில ஆட்சிக்குழு கூட்டத்தில் இந்த நிதியுதவிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது என்று அவர் சொன்னார்.

அந்த நிலச்சரிவு சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந் தவர்களின் குடும்பங்களுக்கும் வீடுகள் பாதிக்கப் பட்ட மக்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் உயிரிழந் தவர்களின் வாரிசுகளுக்கு 10,000 வெள்ளி வழங்கப்படும் வேளையில் காயமடைந்த குடியிருப்பாளர்களுக்கும் வீடுகள் சேதமடைந்தவர்களுக்கும் 5,000 வெள்ளியும் வழங்கப்படுகிறது. வீடுகளைக் காலி உத்தரவிடப்பட்ட 70 குடியிருப்பாளர்கள் ஆறுதல் நிதியாக 500 வெள்ளி பெறுவார்கள்.

இந்த நன்கொடை பாதிக்கப்பட்டவர்களின் சுமையை குறைக்க உதவும் என மாநில அரசு நம்புகிறது என்று அவர் இன்று சிராஸ் பாருவில் உள்ள எம்.பி.ஏ.ஜே மண்டபத்தில் நடைபெற்ற உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சியில் உரையாற்றும் போது அவர் சொன்னார்.

கடந்த மார்ச் 11 ஆம் தேதி அம்பாங், தாமான் புக்கிட் பெர்மாய் 2 இல் நிலச்சரிவில் நிகழ்ந்த நிலச்சரிவில் நால்வர் கொல்லப்பட்டதோடு ஒருவர் காயமடைந்தார். மேலும், 15 வீடுகள் மற்றும் 10 வாகனங்கள் சேதமடைந்தன

# இந்த ஜூன் மாதத்தில் 200 ஸ்ரீ கெம்பாங்கன்
# சந்தை வர்த்தகர்கள் தற்காலிக இடத்திற்கு மாற்றம்

ஷா ஆலம்–

ஸ்ரீ கெம்பாங்கன் சந்தை வர்த்தகர்கள் 200 பேர் இந்த ஜூன் மாதம் முதல் ஜாலான் எஸ்கே 3/2 இல் உள்ள தற்காலிக இடத்துக்குச் செல்லவுள்ளதாக அத்தொகுதி மக்கள் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

ஜாலான் எஸ்கே 10 இல் தற்போதுள்ள பஜார் 40 ஆண்டுகளுக்கும் மேலானது. அது பயன்படுத்துவதற்கு ஏற்றதாக இல்லாததால் தற்காலிக இடத்துக்குச் செல்ல வர்த்தகர்கள் அறிவுறுத்தப்பட்டதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர் என்று ஈன் யோங் ஹியன் வா கூறினார்.

“40 ஆண்டுகளுக்கும் மேலான இந்தச் சந்தை சீன, மலாய் மற்றும் இந்திய வணிகர்களின் பெரும்பான்மையைக் கொண்டுள்ளது.

“இதுவரை, பழைய சந்தைக்கும் தற்காலிக சந்தைக்கும் இடையிலான தூரம் நெருக்கமாக இருப்பதால், அவர்கள் நகர்வதில் எந்த பிரச்சனையும் இல்லை, எனவே வாடிக்கையாளர்களை இழக்கும் அபாயமும் இல்லை,” என்று அவர் கூறினார்.



இதற்கிடையில், சுபாங் ஜெயா நகர சபையின் மேயர், அடுத்த ஆண்டு தொடங்கும் பழைய சந்தையின் புனரமைப்பு இரண்டு வருடங்கள் ஆகும் என்பதால், வர்த்தகர்கள் 2025 வரை தற்காலிக இடத்தில் இருப்பார்கள் என்றார்.

60 லட்சம் ரிங்கிட் மதிப்பிலான பழுதுபார்ப்புகளில் போக்குவரத்து விளக்குகள், ஹம்ப்கள் மற்றும் சாலைத் தடைகள் போன்ற பாதசாரிகள் கடக்கும் பல்வேறு வசதிகள் இருக்கும் என்று டத்தோ ஜோஹாரி அனுவார் விளக்கினார்

## ரமலான் பஜார் வியாபாரிகள் சமையல் எண்ணெயை மறுசுழற்சி செய்யவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும்
# ஊக்குவிக்கப்படுகிறார்கள்




சுபாங் ஜெயா–

சிலாங்கூரில் உள்ள ரமலான் பஜார் வணிகர்கள் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்க பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயை மறுசுழற்சி செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள். சமையல் எண்ணெயை மறுசுழற்சி மையத்திற்கு கொண்டு செல்வதற்கு முன், ஊராட்சி மன்றங்கள் (PBT) வழங்கும் தொட்டிகளில் சேகரிக்கலாம் என்று உள்ளூர் அரசாங்கத்தின் ஊராட்சி மன்றங்கள், பொது போக்குவரத்து, புதுக் கிராம மேம்பாடு ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

இதுவரை கிட்டத்தட்ட 50 ரமலான் பஜார்களில் சுபாங் ஜெயா நகர சபையின் (எம்பிஎஸ்ஜே) மேற்பார்வையின் கீழ் 10 ரமலான் பஜாரில் அதற்கான வசதிகள் உள்ளன. “பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயை மறு சுழற்சி செய்ய வணிகர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம், ஏனெனில் சரியான முறையில் அகற்றப்படாவிட்டால் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்படும்,” என்று அவர் கூறினார்.

நேற்று பஜார் ரமலான் PUJ3/1, புஞ்சா ஜாலில் வியாபாரிகளுடன் நோன்பு துறந்த பின்னர் செய்தி யாளர்களை சந்தித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த கின்ராரா சட்டமன்ற உறுப்பினர் நோன்பின் முதல் வாரத்தில் மாநிலம் முழுவதும் உள்ள ரமலான் பஜார்களில் இருந்து மொத்தம் 56.25 கிலோகிராம் (கிலோ) பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் வெற்றிகரமாக சேகரிக் கப்பட்டது என்று தெரிவித்தார்.


பெட்டாலிங் ஜெயா சிட்டி கவுன்சில் (எம்பிபிஜே), செலாயாங் முனிசிபல் கவுன்சில் (18 கிலோ) மற்றும் எம்பிஎஸ்ஜே (10.75 கிலோ) ஆகியவற்றின் மேற்பார்வையில் நான்கு பஜார்களில் இருந்து மொத்தம் 27.5 கிலோ பெறப்பட்டது என்று அவர் விளக்கினார். ரமலான் முடியும் வரை எவ்வளவு சமையல் எண்ணெய் சேகரிக்கப்படும் என்ற இலக்கு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை, ஆனால் அடுத்த ஆண்டு இதுபோன்ற முயற்சிகள் தீவிரமடையும் என்று நம்புகிறோம்,” என்றார்.

# பெருந்தொற்று காலத்தில் இ-வாலட் பரிவர்த்தனை 131 விழுக்காடு அதிகரிப்பு

லாபுவான்–

இ–வாலட் எனப்படும் இணைய பரிமாற்றப் பயன்பாடு கடந்த 2020 ஆம் ஆண்டைக் காட்டிலும் 131 விழுக்காடு அதிகரித்து கடந்தாண்டில் 60 கோடி பரிவர்த்தனைகளை பதிவு செய்துள்ளதாக உள்நாட்டு வாணிக மற்றும் பயனீட்டாளர் விவகார அமைச்சர் டத்தோஸ்ரீ அலெக்சாண்டர் நந்தா லிங்கி கூறினார்.

கட்டணம் செலுத்துவது மற்றும் பொருள் வாங்குவது உள்ளிட்ட நோக்கங்களுக்கு ரொக்கப் பணத்தைப் பயன்படுத்தும் மலேசியர்களின் எண்ணிக்கை கடந்தாண்டில் 11 விழுக்காடு குறைந்துள்ளதை 2022 ஆம் ஆண்டிற்கான பெய்நெட் அறிக்கை காட்டுவதாக அவர்



சொன்னார்.

பெருந்தொற்று பரவலுக்கு முன்னர் பரிவர்த்தனைகளுக்கு ரொக்கப் பணத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 89 விழுக்காடாக இருந்த வேளையில் கடந்தாண்டு இந்த எண்ணிக்கை 78 விழுக்காடாக குறைந்தாக அவர் தெரிவித்தார்.

ரொக்கமின்றி இணையம் வாயிலாக பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் பழக்கத்தை மலேசியர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதோடு எதிர்காலத்தில் இது மலேசியர்கள் மத்தியில் ஒரு கலாசாரமாகவும் மாறுவதற்கான வாய்ப்பு உள்ளது என்றார் அவர். இதன் அடிப்படையில் சில்லறை விற்பனைத் தொழில்துறையில் இலக்கவியலுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கையில் அமைச்சு ஈடுபட்டு வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

## மாநில அரசின் நிதியுதவி
# மண் சரிவு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நன்றி

அம்பாங்–

கடந்த மார்ச் மாதம் இங்குள்ள தாமான் புக்கிட் பெர்மாய் குடியிருப்பில் ஏற்பட்ட நிலச்சரிவில் பாதிக்கப்பட்டத் தங்களுக்கு நிதியுதவி வழங்கி பொருளாதார சுமையை ஓரளவு குறைக்க முன்வந்த மாநில அரசுக்கு பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்த பேரிடரில் தந்தையை இழந்து வாடும் தங்களுக்கு மாநில அரசின் இந்த உதவி சற்று ஆறுதலாக உள்ளதாக ஆர். ரமாபாரதி (வயது 23) கூறினார்.

அந்த இயற்கைச் சீற்றத்தில் எங்கள் தந்தை சி. இராமசாமியை பறிகொடுத்தோம். அன்னாரின் மறைவினால் ஏற்பட்ட துயரிலிருந்து நாங்கள் குறிப்பாக எங்கள் தாயார் இன்னும் மீளவில்லை என்று அவர் வேதனையுடன் குறிப்பிட்டார். தன் கணவரின் பிரிவை எங்கள் தாயாரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை . அவர் இன்னும் துக்கத்தில் இருக்கிறார். அதனால் இந்த நிதியைப் பெறுவதற்கு அவர் வரவில்லை என்று ரமாபாரதி சொன்னார். நாங்கள் எங்கள் தாயாருக்கு தொடர்ந்து ஆறுதல் கூறி தேற்றி வருகிறோம். துயரிலிருந்து மீண்டும் வாழ்க்கையை நடத்திதான் ஆக வேண்டியுள்ளது. அதற்கு பணமும் தேவைப்படுகிறது. அந்த நிலச்சரிவில் எங்கள் கார் பலத்த சேதமடைந்த காரணத்தால் இந்த நிதியை வாங்குவதற்கு கூட வாடகைக் காரில்தான் நாங்கள் வந்தோம் என்றார் அவர். இதனிடையே, மண்சரிவில் பாதிக்கப்பட்ட தாமான் புக்கிட் பெர்மாய் குடியிருப்பாளர்கள் அனைவருக்கும் உதவி நல்கிய மாநில அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக குடியிருப்பாளர்களில் ஒருவரான நோராஸ்மி முகமது யூசுப் (வயது 52) கூறினார்.

# ஸ்கை மிரர், வேட் வேர்ல்ட் ஆகியவை மாட்டா சுற்றுபயன ஷோவில்

## அதிகம் விற்பனையாகும் தொகுப்புகளாகும்

ஷா ஆலம்–

கடந்த வார இறுதியில் சுற்றுலா முகவர்கள் சங்கத்தில் (மட்டா கண்காட்சி) வழி 500 சிலாங்கூர் சுற்றுலாப் தொகுப்புகள் RM56,687 மதிப்புள்ளவை விற்பனை செய்யப்பட்டன.

கோலா சிலாங்கூரில் உள்ள ஸ்கை மிரர், விண்ட்லாப் இன்டோர் ஸ்கை டைவிங், பெட்டாலிங் ஜெயா மற்றும் வேர்ல்ட் ஷா ஆலம் ஆகிய மூன்று மிகவும் பிரபலமான இடங்கள் என்று சுற்றுலா சிலாங்கூரின் தலைமைச் செயல் முறை அதிகாரி தெரிவித்தார்.

“செப்டம்பர் உட்பட இந்த மாதம் நடைபெறும் கண்காட்சிகள் மூலம் மாநிலத்திற்கு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையின் வழி விற்பனை வருவாய் அதிகரிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்,” என்று அஸ்ருல் ஷா முகமட் கூறினார்.

“ஒரு சுற்றுலா அமைப்பாக, பங்கேற்பு மற்றும் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான உள்நாட்டு சுற்றுப்பயணங்களை ஒழுங்கமைப்பதன் மூலம் மேலும் ஊக்குவிப்புக்கான வாய்ப்பைப் பெறுவோம்.” ஜோகூர், கெடா மற்றும் சபாவில் பூசிங் சிலாங்கூர் டூலு சுற்றுபயனங்கள், சிலாங்கூர் சர்வதேச புகைப்பட விழா மற்றும் உயர் கல்விக்கான பொது நிறுவனங்களின் பூசிங் சிலாங்கூர் டூலு அணி ஆகியவை மற்ற விளம்பரங்களில் அடங்கும் என்று அவர் விளக்கினார்.




இதற்கிடையில், உலக வர்த்தக மையத்தில்(PWC) கோலாலம்பூரில் நடைபெற்ற இரண்டு நாள் கண்காட்சியின் போது 20,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் சிலாங்கூர் சுற்றுலா பெவிலியனை பார்வையிட்டதாக அஸ்ருல் ஷா கூறினார்.

“நாடு எண்டமிக் நிலைக்கு மாறினாலும், அமைப்பாளர்கள் இன்னும் நிலையான இயக்க நடைமுறைகளை (SOP) பின்பற்று கிறார்கள். அவர்கள் சுற்றுச்சூழல் சுற்றுலா, புதிய மற்றும் ஏற்கனவே உள்ள கவர்ச்சிகளை கொண்டிருக்கும், ”என்று அவர் கூறினார்.



## ஐ.சீட் மூலம் மூன்று தொழில்முனைவோர்

# வெ. 18,000 மதிப்புள்ள வர்த்தக உபகரணங்களைப் பெற்றனர்

ஷா ஆலம்–

ஐ.சீட் எனப்படும் சிலாங்கூர் இந்திய சமூக மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு இலாகா மூலம் கோம்பாக்கை சேர்ந்த மூன்று தொழில் முனைவோர் சுமார் 18,000 வெள்ளி மதிப்புள்ள வர்த்தக உபகரணங்களைப் பெற்றனர்.

தற்காலிக டெண்ட் கூடாரங்களைப் பொருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள கே. அசோகனுக்கு 6,785 வெள்ளி மதிப்புள்ள ஏழு செட் கூடாரங்கள் இம்மாதம் முதல் தேதி வழங்கப்பட்டதாக கோம்பாக் மாவட்டத்திற்கான ஐ–சீட் நடவடிக்கை அதிகாரி டினேஷ் செல்வராஜூ கூறினார்.

இந்த ஐ–சீட் உபகரணங்களை வழங்கும் நிகழ்வுக்கு தலைமையேற்ற உலு கிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் ஷஹாரி சுங்கிப் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்று தனது பேஸ்புக் பதிவில் டினேஷ் தெரிவித்தார்.

புகைப்படங்கள் மற்றும் வீடியோ எடுக்கும் சேவையை வழங்கி வரும் பெனடிக் லோரன்ஸ் ஜோசப்புக்கு 6,454 வெள்ளி மதிப்பில் ஐந்து விதமான புகைப்பட சாதனங்கள் இம்மாதம் 4 ஆம் தேதி வழங்கப்பட்டன என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதனிடையே, குத்தகையாளரான டபள்யு. அல்வின் என்பவருக்கு 4,750 வெள்ளி மதிப்புள்ள ஜெனரேட்டர் மற்றும் வெல்டிங் எனப்படும் பற்றவைப்பு இயந்திரங்கள் இம்மாதம் 5 ஆம் தேதி வழங்கப்பட்டன என்று அவர் சொன்னார்.

பெனடிக் மற்றும் அல்வின் ஆகியோர் ரவாங் தொகுதி இந்திய சமூகத் தலைவர் தேவாவிடமிருந்து இந்த உபகரணங்களைப் பெற்றுக் கொண்டனர்.

சமூக பொருளாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதிராவ் முயற்சியில் இந்த ஐ–சீட் திட்டம் கடந்த ஈராண்டுகளாக அமல்படுத்தப்பட்டு வருகிறது.

தகுதி உள்ள இந்திய தொழில் முனைவோருக்கு வர்த்தக உபகரணங்களை வழங்குவதை நோக்கமாக கொண்ட இத்திட்டத்திற்கு மாநில அரசு வருடாந்திர மானியமாக 10 லட்சம் வெள்ளியை வழங்குகிறது.

## சிலாங்கூர் வேலை வாய்ப்பு பயணத் திட்டத்தின் மூலம்

# 715 பேருக்கு வேலை கிடைத்தது

ஷா ஆலம்

கடந்தாண்டு நடத்தப்பட்ட சிலாங்கூர் வேலை வாய்ப்பு பயணத் திட்டத்தின் மூலம் 715 பேருக்கு பணி நியமனம் கிடைத்துள்ளது.

இந்த வேலை வாய்ப்புத் திட்டம் கடந்தாண்டு அக்டோபர் 23 ஆம் தேதி முதல் நவம்பர் 27 ஆம் தேதி வரை மாநிலத்தின் ஆறு இடங்களில் நடத்தப்பட்டதாக மனித மூலதன மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது கைருடின் ஒத்மான் கூறினார்.

இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தில் பங்கு கொண்டவர்களில் 1,178 பேர் இரண்டாம் கட்ட நேர்காணலுக்கு தகுதி பெற்றதோடு வேலையைப் பெறுவதற்குரிய வாய்ப்பும் அவர்களுக்கு கிட்டியதாக அவர் சொன்னார். ஆகவே, சிலாங்கூர் மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்கும் நோக்கில் இவ்வாண்டு ஜூன் மாதமும் அத்தகைய வேலை வாய்ப்புத் திட்டத்தை நடத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

கடந்தாண்டு இந்த வேலை வாய்ப்பு பயணத் திட்டம் ஷா ஆலம், கோல சிலாங்கூர், கோல குபு பாரு, உலு லங்காட் மற்றும் பெட்டாலிங் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டன.

சேவை, உற்பத்தி, மின்னியல், நிர்வாகம், வான் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் 25,000 வேலை வாய்ப்புகள் இச்சந்தையில் வழங்கப்பட்டன. இது தவிர வரும் ஜூன் மாதம் ஷா ஆலம் மாநாட்டு மையத்தில் நடத்தப்படவிருக்கும் சிலாங்கூர் மெகா வேலை வாய்ப்பு விழாவில் 30,000 வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.



### குறைந்தபட்ச ஊதியம்:

# சில வேலைவாய்ப்புத் துறைகளுக்கு நெகிழ்வுத் தன்மை அளிக்கப்படும்



புத்ராஜெயா–

மே 1–ம் தேதி முதல் RM1,500 குறைந்தபட்ச ஊதிய விகிதம் அமலுக்கு வரும்போது, முறைசாரா துறை உட்பட பல வேலைவாய்ப்புத் துறைகளுக்கு நெகிழ்வுத்தன்மை அளிக்கப்படும் என்று மனிதவள அமைச்சர் டத்தோஸ்ரீ எம்.சரவணன் தெரிவித்தார்.

அவர்களில் ஒற்றைப்படை வேலை செய்து வருமானம் ஈட்டுபவர்கள், ஐந்துக்கும் குறைவான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் மற்றும் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத் துறைகள் போன்ற பெரும் நஷ்டத்தை எதிர்கொள்பவை அடங்கும், என்றார்.

2012ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய உத்தரவை அமல்படுத்தியபோது வழங்கப்பட்ட அதே நெகிழ்வுத்தன்மையை வலியுறுத்தி, தேவைப்படும் எந்த தரப்பினருக்கும் அரசாங்கம் ஒரு வருட நெகிழ்வுத்தன்மையை வழங்கும் என்றும், அமைச்சரின் நோக்கத்தின்படி அதை நீட்டிக்க முடியும் என்றும் சரவணன் கூறினார்.

“ஒற்றைப்படைத் தொழிலாளர்கள் இன்னும் RM500 முதல் RM600 வரை சம்பளம் பெறுகிறார்கள். நான் நிறுவனங்களை ரிங்கிட் 1,500 செலுத்தும்படி கட்டாயப்படுத்தினால், அவர்கள் விரைவில் வேலையை விட்டுவிடுவார்கள், ”என்று அவர் நேற்று இங்கு மைக்ரோக்ரெடென்ஷியல் எச்ஆர்டி கார்ப் முன்முயற்சியின் தொடக்கத்தில் செய்தியாளர்களிடம் கூறினார்.

மார்ச் 19 அன்று, பிரதம மந்திரி டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாகோப், மலேசியா, மே 1 முதல் நாடு முழுவதும் RM1,500 குறைந்தபட்ச ஊதியத்தை அமல்படுத்தும் என்று அறிவித்தார்.

சரவணன் கூறுகையில், குறைந்தபட்ச ஊதிய விகிதத்தை அமல்படுத்துவது தேசிய ஊதிய ஆலோசனை கவுன்சில் சட்டம் 2011 (சட்டம் 732) இன் படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

“இப்பேது இல்லை என்றால் எப்பேது ? சட்டம் (சட்டம் 732) இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று கூறுகிறது. நான் அதைச் செய்யாவிட்டால், நான் சட்டத்தை மீறுவதாக மக்கள் என்னை விமர்சிப்பார்கள், ”என்று அவர் கூறினார்.

### ஷா ஆலமில் வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு

# வெ.15 கோடி ஒதுக்கீடு




ஷா ஆலம்–

கடந்தாண்டு டிசம்பர் மாதம் மாநகரின் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்ததைத் தொடர்ந்து ஷா ஆலம் வெள்ளத் தடுப்புத் திட்டத்தை (சுசுட்)ஷா ஆலம் மாநகர் மன்றம் அமல்படுத்தவுள்ளது.

தாமான் ஸ்ரீ மூடா, டி.டி.டி.ஐ., தாமான் மெஸ்ரா, செக்சன் 13 ஆகிய பகுதிகளை இலக்காக கொண்ட இத்திட்டத்தை அமல்படுத்த மாநகர் மன்றம் 15 கோடி வெள்ளியை ஒதுக்கியுள்ளதாக டத்தோ பண்டார் டத்தோ ஜமானி அகமது கூறினார்.

இந்த சுசுட் வெள்ளத் தடுப்புத் திட்டம் குறுகிய காலம், மத்திய காலம் மற்றும் நீண்ட காலம் என மூன்று கட்ட திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. தொடக்கமாக 5 கோடி வெள்ளி செலவில் குறுகிய காலத் திட்டத்தை அமல்படுத்தவிருக்கிறோம் என்று அவர் சொன்னார்.

உடனடியாக மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களில் கால்வாய்கள் மற்றும் நீர் சேகரிப்பு குளங்களை சீரமைப்பதாகும் என்று அவர் தெரிவித்தார்.

இங்குள்ள தங்கும் விடுதி ஒன்றில் நடைபெற்ற சுசுட் வெள்ளத் தடுப்புத் திட்டம் தொடர்பான கலந்துரையாடலை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார்.

ஷா ஆலம் மாநகரில் வெள்ளப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான விவேகத் திட்டத்தின் தொடக்கத்தை குறிக்கும் வகையில் சுசுட் சின்னத்தையும் அவர் வெளியிட்டார்.

முன்னதாக இந்த கலந்துரையாடல் நிகழ்வில் உரையாற்றிய அவர், வெள்ளத் தடுப்பு நடவடிக்கைத் திட்டத்தை அமல்படுத்தும் முதல் ஊராட்சி மன்றமாக ஷா ஆலம் மாநகர் மன்றம் விளங்குவதாக குறிப்பிட்டார்.

# சிலாங்கூர் இந்தியச் சமூகத் தலைவர்கள் சேவைகளையும் மதித்து வெ.1000 உதவித்தொகை

ஷா ஆலம்–

இவ்வாண்டு மாநில அரசின் நோன்பு பெருநாள் உதவித் தொகை அரசு ஊழியர்களின் பங்களிப்பை மட்டும் அங்கீகரிக்கும் வகையில் இல்லாமல், மக்கள் பல இன்னல்களை எதிர்கொள்ளும் போது அவர்களுக்கு அவசர உதவிகளை ஏற்பாடு செய்த பள்ளிவாசல் மற்றும் சமயப்பள்ளி முன்களப் பணியாளர்களுக்கு 500 வெள்ளிகளும் வழங்கப்படும் என்றார் மந்திரிபுசார்.

அதே வேளையில் மக்கள் அவசர உதவித்திட்டங்களில் சேவையாற்றிய மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பூர்வீகக் கிராமங்களின் தலைவர் செயலாளர்கள், சீனப் புதுக்கிராமத் தலைவர்கள், சிலாங்கூர் இந்தியச் சமூகத் தலைவர்கள் மட்டுமின்றி, WBS என்னும் மகளிர் ஆற்றல் உயர்வுக்குப் பயிற்சியாளர்களாகச் சேவையாற்றி வருபவர்களுக்கும் ஆயிரம் ரிங்கிட் உதவி தொகையை வழங்குவதாக அவர் கூறினார்..

நோன்பு பெருநாளுக்கு முன்னதாக அதாவது ஏப்ரல் 27 ஆம் தேதி அவர்களுக்கு மாநில அந்தச் சிறப்பு உதவித் தொகையை வழங்கும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருன் ஷாரி தெரிவித்தார்.

இந்தச் சிறப்பு உதவித் தொகை திட்டத்திற்காக 3 கோடியே 90 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், நோன்புப் பெருநாளை முன்னிட்டு இங்குள்ள ஜூப்ளி பேராக் அரங்கில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.



“ சிலாங்கூர் 2022ம் ஆண்டு RM 234 கோடி ரிங்கிட் பட்ஜெட். அதில் RM 112 கோடி வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது. கடந்த நவம்பர் 26 அன்று ஐந்து முக்கியத் திட்டங்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ள கோவிட்-19 தொற்றுக்குப் பிந்தைய பொருளாதாரத்தை இயக்குவது உட்படச் சமூகத்தின் நல்வாழ்வை பலப்படுத்துவதும் இதில் அடங்கும். பல சுவாரஸ்யமான மூன்றாம், நான்காம் மற்றும் இறுதி பாக முக்கியத் திட்டங்கள் சிலாங்கூர்கினி வெளியிடுகிறது. கடந்த இரண்டு மாதங்களில் முதல் இரண்டு பாகங்கள் வெளியிடப்பட்டன. மாணவர்கள், பெண்கள், B40, மாற்றுத் திறனாளிகள், தொழில்முனைவோர் மற்றும் விவசாயிகள் உட்பட அனைத்துக் குழுக்களுக்கும் பட்ஜெட் நன்மை பயக்கும், சுகாதாரம், கல்வி, தொழில், வணிகம், சுற்றுலா மற்றும் விவசாயம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியது.கித்தா சிலாங்கூர் கருப்பொருள்: மாநிலம் சோதனையைத் தாங்கி, மனிதக் கண்ணியத்தை உயர்த்துதல் ஆகும். கடந்த ஆண்டு இறுதியில் எட்டு மாவட்டங்களைத் தாக்கிய வெள்ள பேரழிவுக்குப் பிறகு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப இந்தப் பட்ஜெட் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ”

# ஆரோக்கியமான, பசுமையான மற்றும் புத்திசாலியான மாநிலம்

**திட்டம் 3**

## சிலாங்கூர் பொது சுகாதார நிகழ்ச்சி நிரலை வலுப்படுத்துதல்

**சிலாங்கூர் மாநில பொது சுகாதார கவுன்சில் நிறுவுதல் (SelPHAC)**

பொது சுகாதார மேலாண்மையை மேம்படுத்துதல்

பொது சுகாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதற் கான மாநில அரசின் சிந்தனைக் குழுக்கள்

நோய் தொற்றுகளை எதிர்கொள்ளும் வகையில் ஒழுங்கான மற்றும் திறமையான முறையில் மாநில அரசின் மேலாண்மை மற்றும் தயார்நிலையை உறுதி செய்தல்

**ஆரோக்கியமான சிலாங்கூர் திட்டம்**

ஆரோக்கியமான காப்பீட்டுத் திட்டத்திற்கு பதிலாக மாற்றுதல்(SIPS)

RM4.6 கோடி வருடாந்திர ஒதுக்கீடு

90,000 பெறுநர்களுக்கு பலன்கள்

நாள்பட்ட மற்றும் ஆதரவற்ற நோயாளி களுக்கு முன்னுரிமை

கிரேட் 44 மற்றும் அதற்கு கீழ் உள்ள அரசு ஊழியர்களுக்கு சிலாங்கூர் ஆரோக்கியமான அரசு ஊழியர்கள் திட்டம் மூலம் சுஆ10 லட்சம் ஒதுக்கீட்டில் பயனடைகிறார்கள்.

**இதய சிகிச்சை திட்டம்**

-இலவச இதய சிகிச்சை சேவைகள்

-சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகத்தின் (PKNS) நிதியுதவியின் மூலம் RM50 லட்சம் வருடாந்திர ஒதுக்கீடு

**காசநோய் சிகிச்சை** (TIBI)
-காசநோய் சிகிச்சைக்காக RM800,000 ஒதுக்கீடு

**கோவிட்-19 மேலாண்மை**

RM500,000 ஒரு தொற்று நோய்க்கான சாத்தி யக்கூறுகளைத் தயாரிப்பதற்காக

நிலையான இயக்க நடைமுறை இணக்கம் தொடர்பான பல்வேறு திட்டங்களைச் சேர்க்கவும்

கோவிட்-19 நோயாளிகளுக்கு ஆதரவு அமைப்பை மேம்படுத்துதல்

**புற்றுநோய் ஸ்கிரீனிங் சோதனை (CanSEL)**

RM10 லட்சம் ஒதுக்கீடு

மேமோகிராம், கர்ப்பப்பை வாய், பெருங்குடல் மற்றும் புரோஸ்டேட் நோய் கண்டறியும் நிலை வரை பரிசோதனை

**இலவச சுகாதார பரிசோதனை திட்டம் (சிலாங்கூர் ஸ்கிரீனிங்)**

5,000 மாநில குடிமக்களுக்கு RM15 லட்சம் ஒதுக்கீடு

**ஸ்லிம் சிலாங்கூர்**

சிலாங்கூர் ஸ்லிம் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துகிறது

RM300,000 ஒதுக்கீடு

**ஆரோக்கியமான சிலாங்கூர் உதவி**

4,000 பெறுநர்களுக்கு RM50 லட்சம் ஒதுக்கீடு

தலசீமியா, புற்றுநோய் மற்றும் நாட்பட்ட நோய்கள் உள்ள நோயாளிகளுக்கு உதவியை விரிவுபடுத்துகிறது

போக்குவரத்து செலவுகள் மற்றும் உணவுப் பொருட்களுக்கான உதவி

சிறுநீரக டயாலிசிஸ், கண்புரை அறுவை சிகிச்சை, சிறு அறுவை சிகிச்சை அல்லது மருத்துவ உதவி போன்ற தற்போதைய உதவிகளை பராமரிக்கவும்

**டிங்கி தடுப்பு மற்றும் கட்டுப்பாடு**

RM50 லட்சம் ஒதுக்கீடு

டுரோன்களைப் பயன்படுத்தி உள்ளூர் தொற்று பரவல் கண்காணிப்பு மற்றும் பொது மக்களுக்கு அணுகக்கூடிய ஹாட்ஸ்பாட் வட்டார கண்காணிப்பு பயன்பாடுகளை உருவாக்குதல்.

**சமூக சுகாதார தன்னார்வத் திட்டம் சிலாங்கூர் (SUKA)**

RM15 லட்சம் ஒதுக்கீடு

சிலாங்கூரில் உள்ள 56 மாநிலத் தொகுதிகளில் சமூக சுகாதார தன்னார்வ குழுக்கள் அணிதிரட்டப்பட்டன.

பொது சுகாதாரம் தொடர்பான திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு

சுகாதாரப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

மாநில அரசின் அதிகாரப்பூர்வ தூதரானார்

**குழந்தைகளுக்கான உணவு ஊட்டச்சத்து (சிலாங்கூர் குழந்தைகள் ஆரோக்கியமான குழந்தைகள்)**

RM10 லட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப் படுகிறது

10 மாத காலத்திற்கு 700 குழந்தைகள் வரை பயனடைவார்கள்

போதிய உணவு உட்கொள்ளாததால் ஏற்படும் பிரச்சனைகளை தடுக்கும்.

**கண் சுகாதார பரிசோதனை**

சட்டமன்றத்தில் உள்ள சேவை மையத்திற்கு கண்ணாடிகளுக்கான விண்ணப்பங்கள் அதிகரித்து வருகின்றன

எனவே, மாநில அரசு குழந்தைகளின் கண் சுகாதார பரிசோதனைக்காக RM 200,000 ஒதுக்கியுள்ளது

**சக்னா மனநலம்(செஹாட் - செலங்கா)**

செலங்கா செயலியின் மூலம் மன ஆரோக்கியத்தின் அளவை தீர்மானிக்க சுய ஆரம்ப ஸ்கிரீனிங் சோதனைகள்

RM10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**திட்டம் 4:** பசுமையான சூழல் மற்றும் நிலையான வளர்ச்சியை விரிவுபடுத்துதல்

**நீர் வழங்கல் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல்**

RM10 கோடி ஒதுக்கப்பட்டது

2030 ஆம் ஆண்டளவில் நீர் விநியோக வரம்பை 15 சதவீதம் அதிகரிக்க லபோஹன் டாகாங் நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டம் 2 மற்றும் சுங்கை ராசா நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை மேம்படுத்தவும்.

சிலாங்கூர், கோலாலம்பூர் மற்றும் புத்ராஜெயாவில் 6,000 கிமீ நீளமுள்ள பிரதான குழாய்களை மாற்றுதல்.

**பிரதான ஆற்றுப் படுகையில் நீர் தர மேம்பாடு**

சுங்கை சிலாங்கூர், சுங்கை லங்காட் மற்றும் சுங்கை கிள்ளானில் படுகைகளில் மாசுக் கட்டுப்பாட்டு முறைகளை உருவாக் குதல்.

தண்ணீர் தரத்தை மேம்படுத்துதல்.

ஜீரோ டிஸ்சார்ஜ் பாலிசியை அடை வதற்கு பொருளாதார மதிப்பை கணக்கில் கொண்டு தண்ணீர் கட்டணங்களை அமல் படுத்த வேண்டும்.

**மின்சார வாகனம் சார்ஜ் செய்யும் நிலையம்**

எலக்ட்ரானிக் வாகனங்கள் (EV) பயன்பாட்டில் முன்னணி மாநிலமாக இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த ஆண்டு EV பயனர்களுக்கு உள்ளாட்சி நிர்வாகத்தின் கீழ் பார்க் கிங் கட்டணம் இலவசம்

2025க்கு முன் 10,000 EV சார்ஜர்கள் நிறுவப்படும்

RM1 கோடி முதலீட்டில் தனியார் துறையுடன் இணைந்து இந்த ஆண்டு 1,000 சார்ஜர்கள் நிறுவப்பட்டுள்ளன.

### பசுமையான சுற்றுப்புற வளர்ச்சி

– பசுமைத் தொழில்நுட்பத் தயாரிப்புகளை நிறுவுதல் மற்றும் பசுமை சுற்றுப்புற மேம்பாட்டிற்காக RM600,000

### வெள்ளத் தணிப்பு /தடுப்பும் வளர்ச்சியும்

–சுங்கை லங்காட், சுங்கை கிள்ளான் மற்றும் சுங்கை சிலாங்கூர் படுகையில் நீர் பெருக்கை தணிக்க RM92.5 லட்சம் ஒதுக்கீடு.

### வடிகால் அமைப்பு வளர்ச்சி

– நீர்ப்பாசன மற்றும் வடிகால் அமைப்பு திணைக்களம் 92 லட்சம் ரிங்கிட் ஒதுக்கீடு செய்துள்ளது

– அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் வடிகால் அமைப்புகளை மேம்படுத்துதல்

### நதிப் படுகை வளர்ச்சி

– RM1.56 கோடி ஒதுக்கீடு நதி மேலாண் மையில் சிறப்பு சேவை களை வழங்குகிறது

– நீர் ஆதாரங்களின் தரம் மற்றும் அளவைப் பாதுகாப்பதை உறுதி செய்தல்

### சுற்றுச்சூழலுக்கு உகந்த வடிகால் மேலாண்மை

– சுற்றுச்சூழலுக்கு உகந்த வடிகால் – முக்கிய திட்டம் (பிஸ்மர்) தயார்

– சபாக் பெர்ணாமில் உள்ள சுங்கை பெசார் பகுதியை உள்ளடக்கியது

–கோம்பாக் மாவட்டத்தில் உள்ள சுங்கை கோங்கில் வெள்ளப் பிரச்சினையைச் சமாளிக்கராவாங்கில் உள்ள வெள்ள நீர்த்தேக்கக் குளம் 1.5 கோடி செலவிலும், கம்போங் புடிமானில் உள்ள வெள்ள நீர்த்தேக்கக் குளம் RM2 கோடி செலவிலும் ஒருங்கிணைக்கப்பட்டது.

### கடலோர வளர்ச்சி

– குறிப்பாக சபாக் பெர்ணாம் மற்றும் கோலா சிலாங்கூரில் கடற்கரையில் அணைகள்

– நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் திணைக்களம் RM52 லட்சத்துக்கு விண்ணப்பித்தது

### மரம் நடும் திட்டம்

– அனைத்து மாநில சட்டப் பேரவை களுக்கும் RM800,000.

– மலேசிய பசுமைத் திட்டம் செயல்படுத்தல்: 10 கோடி மரம் நடும் பிரச்சாரம் (2021-2025)

### காடழிப்பு மறுசீரமைப்பு

– கோலா லங்காட்டில் தீ மற்றும் ஆக்கிரமிப்பு காரணமாக சிதைந்த காடுகளை மீட்டெடுக்க வேண்டும்

– கோலா லங்காட்டில் சுமார் 500 ஹெக்டேர் மூலம் மரங்களை மீண்டும் நடுதல்

– 1 கோடி ரிங்கிட் ஒதுக்கப்படும்

### நுகர்வோர் விழிப்புணர்வு பிரச்சாரம்

–பிளாஸ்டிக் மற்றும் பாலிஸ்டிரீன் இல்லாத பிரச்சாரங்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் பிளாஸ்டிக் வைக்கோல் இல்லாத சமையல் எண்ணெய் சேகரிப்பு பிரச்சாரங்கள்

– இந்த பிரச்சாரத்தை தீவிரப்படுத்த, மொத்தம் RM 880,000 ஒதுக்கப்பட்டது

### கேஇடிபி கழிவு மறுசுழற்சி மையம்

– ஜாலான் கோர்ப்ராட், மேரு, கிள்ளான் மற்றும் புக்கிட் பூச்சோங், சுபாங் ஜெயா ஆகிய இடங்களில் பொருள் மீட்பு வசதி (எம்ஆர்எஃப்) என இரண்டு மறுசுழற்சி மையங்களை நிறுவுவது.

– ஒரு நாளைக்கு 20 டன் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை நிர்வகிக்கிறது

### ஆற்றங்கரை மேம்பாடு - சிலாங்கூர் கடல்வழி நுழை வாயில்

– கிள்ளான் ஆறு பாதுகாப்பு முயற்சிகள் தெலோக் கபாஸ் முன்னாள் குப்பை கிடங்கு கிள்ளான்

– ஆறு மாசுபாடுக்கு பங்களிக்கிறது

– கிள்ளான் ஆற்று நீரை பயன்பாடுக்கு ஏற்ற மாற்று ஆதாரமாகப் பயன்படுத்த முடியும் என்று மாநில அரசு நம்புகிறது.

### சிலாங்கூர் அக்ரோஏசான் திட்டம்

– கோவிட்-19 தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விவசாய வணிகம் மற்றும் வேலை வாய்ப்புகள்

– பிகேபிஎஸ் விவசாயம் மற்றும் கால்நடைப் பொருட்களுக்கான மொத்த விலைகளை பேரம் பேசுதல்

### சிலாங்கூர் ஸ்மார்ட் அக்ரோபார்க் (SSAP)

– சபாக் பெர்ணாமில் உள்ள சங்காட் மந்திரியில் உணவு பாதுகாப்பு திட்டம் 2022 முதல் காலாண்டில் தொடங்கும்

– மாநில உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது எப்போதும் உகந்த அளவில் உள்ளது

## திட்டம் 5

## ஸ்மாட் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயத்தை வலுப்படுத்துதல்

### சிலாங்கூர் இ-வாலட்

– செலங்கா பயன்பாட்டின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

–மாநில அரசின் வணிகச் சேவைகள், உள்ளாட்சி அமைப்புகள், சட்டப்பூர்வ அமைப்புகள் மற்றும் சிலாங்கூர் மாநில அரசின் துணை நிறுவனங்கள்.

– ஸ்மார்ட் சிலாங்கூர் டெலிவரி யூனிட் (SSDU) க்கு சொந்தமான CEPAT (குடிமகன் மின்-பணம்) மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

– வரி செலுத்துதல் மற்றும் உள்ளூர் அரசாங்க வருவாய், பார்க்கிங் பண மற்ற கட்டண தளத்திற்கு மாற்றுவது.

### GO சிலாங்கூர் செயலி

– சிலாங்கூர் சுற்றுலா ஆப்ரேட்டர்கள் ஆன்லைனில் சுற்றுலா தளங்களை மேம்படுத்த டிஜிட்டல் மயமாக்கல் உதவும்.

– சிலாங்கூரில் உள்ள 100,000 சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவுவது.

– ஹோட்டல் முன்பதிவுகள், விமான நிலைய இடமாற்றங்கள், ஈர்ப்பு டிக்கெட்டுகள், ஸ்பா பற்றுச் சீட்டு, உணவு பற்றுச் சீட்டு, ஒருநாள் பயணம் மற்றும் தனிப்பட்ட சுற்றுப் பயணங்களை எளிதாக்குதல்

### சிலாங்கூர் அட்வான்ஸ்

– பணப்புழக்கத்தை மீட்டெடுக்கவும் மற்றும் RM30 கோடி நிதிக் கடனுடன் மாநிலத்தின் பொருளாதாரத்தின் நிலைத்தன்மையை உறுதிப் படுத்தவும்.

– RM100 கோடி வரை சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு மொத்த நிதியுதவியின் சுழற்சியை உருவாக்குகிறது

– 150,000 வேலைகள் மற்றும் 5,000 சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் செயல்பாடுகளை தொடர்ந்து காத்தல்

### சிலாங்கூர் பொதுத் தரவு

– 2025க்குள் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் ஒரு சிறந்த ஸ்மார்ட் மாநிலம் சிலாங்கூர் எனும் ஆசையை நனவாக்குதல்

–RM20 லட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டது.

– அரசு சேவையை மேம்படுத்தும்

### சிலாங்கூர் டிஜிட்டல் பார்ட்னர் மற்றும் பிளாட்ஃபார்ம் (PLATS)

– RM60 லட்சம் கூடுதல் ஒதுக்கீடு

– சிலாங்கூர் மாநில மூலதனமாக்கல் பெர்ஹாட்டின் பங்களிப்பிலிருந்து பெறப்படுகிறது

– சிறு, நடுத்தர மற்றும் குறுந்தொழில் முனைவோர் வணிகத்தில் டிஜிட்டல் மயமாக்கலுக்கு ஏற்ப உதவுதல்

### சிலாங்கூர் சைபர் பாதுகாப்பு பிரிவு

– தரவு பாதுகாப்பை இருப்பதை உறுதி செய்தல்

– 10 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்படும்

### ஸ்மார்ட் சிசிடிவி

– ஸ்மார்ட் சிசிடிவி எண்ணிக்கை அதிகரிப்பதன் மூலம் பொது பாதுகாப்பு

– 2025க்குள் 2,000 யூனிட் சிசிடிவிகள் நிறுவப்பட்டு முழுமையாக செயல்படும்

– ஸ்மார்ட் சிலாங்கூர் முயற்சியின் மூலம் மேலும் 200 யூனிட்கள் சேர்க்கப்படும் மற்றும் RM 50 லட்சம் செலவாகும்

### சிலாங்கூர் மாநில தரவு பரிமாற்றம் (SELGDX)

– 2021 முதல் 2023 வரை **SELGDX** வளர்ச்சி.

– 20 லட்சம் ரிங்கிட் ஒதுக்கீடு


– பேரம் பேசும் தரவு தரகு சேவைகள் .

– சிலாங்கூரில் உள்ள நிறுவனங்கள் முழுவதும் தரவுப் பகிர்வைச் செயல்படுத்த, தரநிலைகள், உபகரணங்கள், சேமிப்பு மற்றும் தகவல் பதிவேடுகளைக் கொண்டுள்ளது.

– நிறுவனங்களின் உள்கட்டமைப்பின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு செலவுகளின் நகல்களை குறைத்தல்

– பொறுப்புகளை நிறைவேற்றுவதில் நிறுவனங்களின் பங்கை வலுப்படுத்துதல்






# பக்கத்தான் அரசின் முயற்சியால் 1.75 ஏக்கர் நிலம்

## எழில்மிகு தோற்றத்தில்




# அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயில்

ஷா ஆலம், பத்துத் தீகா பகுதியில் அமைந்திருந்த ஈபோர் தோட்டம் பற்றி இப்போதைய தலைமுறை அறிந்திருக்க வாய்ப்பில்லை. மேம்பாடு என்ற பெயரில் அத்தோட்டம் சிதிலமாய்ச் சிதைந்து போனாலும் தோட்ட மக்களின் வரலாற்றைச் சொல்லும் விதமாக அதே பகுதியில் கம்பீரமாக எழுந்தருளியிருக்கிறது அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயில்.

ஷா ஆலமிருந்து கே.எல்.ஐ.ஏ. விமான நிலையம் நோக்கிச் செல்லும் இலிட் விரைவுச் சாலையின் அருகே யு.எஸ்.ஜே. ஹைட்ஸ் பகுதியில் அமைந்துள்ளது இந்த ஆலயம்.

சுபாங் ஜெயா, யு.எஸ்.ஜே. ஹைட்ஸ் என்பதுதான் இந்த ஆலயத்திற்கான அதிகாரப்பூர்வ முகவரியாக இருந்தாலும் ஷா ஆலம், செக்சன் 22, பெர்சியாரான் ஜூப்ளி பேராக் வழியாகத்தான் ஆலயத்தை அடைய முடியும். இந்த ஆலயத்திற்குச் செல்லும் போது இலிட் நெடுஞ்சாலைக்குக் கீழ் அமைக்கப்பட்டுள்ள சுமார் 100 அடி சுரங்கப் பாதையைக் கடக்கும் புதிய அனுபவமும் நமக்குக் கிடைக்கும்.

சரிவான மலைப்பகுதியில் சுமார் ஒன்றே முக்கால் ஏக்கர் நிலப்பரப்பில் நிசப்தமான பகுதியில் வீற்றிருக்கிறது இந்த ஆலயம். நுட்பமான சிற்பக்கலைகளும் கண்களுக்கு இதமூட்டும் வெளிர் மஞ்சள் நிறமும் ஆலயத்தின் அழகுக்கு மெருகு சேர்க்கின்றன.

90 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மேம்பாடுகளால் ஈபோர் தோட்ட மக்கள் உடைந்த உண்டியலிலிருந்து சிதறிய சில்லறைகளாய்ப் பல திசைகளில் பிரிந்து போனாலும் அவர்களை ஒரே மையப்புள்ளியில் ஒன்றிணைக்கும் மகத்தான பணியை இந்த ஆலயம் மௌனமாய் ஆற்றி வருகிறது.

இந்த ஆலயத்தின் வரலாறு, போராட்டம் மற்றும் வளர்ச்சி குறித்து "சிலாங்கூர் இன்று" பத்திரிகையிடம் விவரிக்கிறார் ஆலயத் தலைவரும் தலைமை குருக்களுமான பி.ஏ.தனபாலன் குருக்கள்.

### தீயசக்திகளால் தீக்கிரையாக்கப்பட்ட ஆலயம்

ஈபோர் தோட்ட மக்களின் பிரதான வழிபாட்டு தலங்களாக 1886 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயமும் ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயமும் விளங்கி வந்தன. 90 ஆம் ஆண்டுகளில் தோட்டம் மேம்பாட்டிற்காகக் கொள்முதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டில் மேம்பாட்டாளர்களால் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் உடைக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டில் ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயம் தீய சக்திகளால் தீக்கிரையாக்கப்பட்ட துயரச் சம்பவமும் நிகழ்ந்தது.

இதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே பெரும் போராட்டம் வெடித்தது. இழந்த ஆலயத்தை நிலை நிறுத்த தோட்ட மக்கள் தொடர்ந்து போராடி வந்தனர் என்று தனபாலன் கூறினார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு தேர்தலில் மக்கள் கூட்டணிக்குச் சிலாங்கூரில் கிடைத்த வெற்றி எங்கள் போராட்டத்திற்குத் திருப்பு முனையை ஏற்படுத்தியது. அப்போது பொறுப்பில் இருந்தவர்கள் எங்கள் கோரிக்கையை ஏற்றுத் துரிதக் கதியில் நடவடிக்கை மேற்கொண்டனர். இதன் விளைவாக ஒன்றே முக்கால் ஏக்கர் நிலம் கடந்த 2010 ஆண்டில் எங்களுக்கு உறுதி செய்யப்பட்டு நிலப்பட்டாவும் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தை நிர்மாணிக்கும் பணியைத் தொடக்கினோம். கடந்த 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்தின் கட்டுமானப் பணிகள் ஏழாண்டுகளுக்குப் பின்னர் முற்று பெற்றுக் கடந்த 2017 மே மாதம் 7 ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த ஆலயத்தை நிர்மாணிக்கச் சுமார் 18 லட்சம் வெள்ளி செலவானது. ஆலயத் திருப்பணிக்குச் சிலாங்கூர் அரசு 30,000 வெள்ளி வழங்கி உதவியதோடு மத்திய அரசிடமிருந்தும் மானியம் கிடைத்தது. பக்தர்களும் கொடை நெஞ்சர்களும் தங்கள் பங்களிப்பை வழங்கித் திருப்பணி முழுமை பெறத் துணை புரிந்தனர் என்றார் அவர்.

### சிறப்பு அம்சம்

இந்த ஆலயத்தின் சிறப்பு அம்சம் என்னவென்று கேட்ட போது, ஆலயக் கருவறையில் வீற்றிருக்கும் சிவபெருமான் சிற்பத்தைச் சிறப்பு அம்சமாகக் குறிப்பிடலாம் என்று தனபாலன் குருக்கள் கூறினார். வழக்கமாகக் கருங்கல்லில் செதுக்கப்படும் சிலையாக இது இல்லாமல், இந்தியாவின் டில்லியிலுள்ள ஓங்காரேஸ்வரர் நர்மதா ஆற்றிலிருந்து கொண்டு வரப்பட்ட சிவபெருமான் சிலை கருவறையில் பிரதிர்ஷடை செய்யப்பட்டுள்ளது என்றார்.

ஆலயத்தில் பிரதானமாகச் சிவபெருமான், காளிகாம்பாள் சந்நிதிகள் உள்ளன.இது தவிர ஈபோர் தோட்டத்தில் இருந்த ஸ்ரீ மகா மாரியம்மனும் இங்கு வீற்றிருக்கிறார். தவிர, விநாயகர், முருகப் பெருமான சந்நிதிகளோடு நவக்கிரகமும் அமைக்கப்பட்டுள்ளது.

வெறும் வழிபாட்டு தலமாக மட்டுமின்றிப் பல திக்கிலும் பிரிந்து போன முன்னாள் ஈபோர் தோட்ட மக்களை ஒன்றிணைக்கும் மையமாகவும் இந்த ஆலயம் விளங்குகிறது. அதோடு மட்டுமின்றி, முக்கிய விழாக்கள் மற்றும் ஒவ்வோராண்டும் நடைபெறும் வைகாசி விசாகத் திருவிழாவின் போது நாட்டின் பல பகுதிகளிலிருந்து பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை புரிவர் என அவர் குறிப்பிட்டார்.

### சமய, சமூகப் பணிகள்

இளம் தலைமுறையினர் மத்தியில் மார்க்க நெறியை வளர்க்கும் நோக்கில் தேவாரம், திருவாசக வகுப்புகளை நடத்துகிறோம். ஈபோர் தோட்டத்தில் பயிலும் ஆறாம் ஆண்டு மாணவர்களுக்கு ஆண்டு தோறும் யு.பி.எஸ்.ஆர். தேர்வு சமயத்தில் சிறப்பு வழிபாடு நடத்தி வந்துள்ளோம்.

எஸ்.பி.எம். மாணவர்களுக்குச் சனிக்கிழமை தோறும் தமிழ் வகுப்புகளை ஆலய ஏற்பாட்டில் நடத்தி வந்தோம். எனினும், கோவிட்–19 நோய்ப் பரவல் காரணமாக அத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இது தவிர, கோவிட்–19 பெருந்தொற்று பரவலின் போது வசதி குறைந்த 400 குடும்பங்களுக்குத் தலா 100 வெள்ளி பெறுமானமுள்ள உணவுப் பொட்டலங்களை இரு கட்டங்களாக விநியோகித்தோம். அந்த உணவுப் பொருள் விநியோக நிகழ்வொன்றில் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதிராவ் கலந்து கொண்டார் என அவர் தெரிவித்தார்.

### எதிர்காலத் திட்டங்கள்

ஆலய வளாகத்தில் 700 பேர் வரை அமரக்கூடிய மண்டபம், ராஜகோபுரம், கொடி மரம் ஆகியவற்றை நிர்மாணிக்கவும் ஆலயத்தை சுற்றி மதில் சுவர் எழுப்பவும் தாங்கள் திட்டமிட்டுள்ளதாக தனபாலன் சொன்னார்.



இத்திட்டத்தை அமல்படுத்த தங்களுக்கு 10 லட்சம் வெள்ளி வரை தேவைப்படுவதாகவும் சிறப்பு பூஜைகள், விருந்து நிகழ்வு மற்றும் பக்தர்களின் நன்கொடை மூலம் இத்திட்டத்தை மேற்கொள்ள தாங்கள் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# சுபாங் ஜெயா, துன் சம்பந்தன் (வாவாசான்) தமிழ்ப்பள்ளி

## வேற்று மொழிப் பள்ளிகளுக்கு மத்தியில் மாற்று குறையாத தமிழ்ப்பள்ளி




**இன நல்லிணக்கத்தைப் பள்ளி நிலையிலே தொடங்கும் நோக்கில் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வாவாசன் பள்ளித் திட்டத்தை அரசாங்கம் தொடக்கியது.**

ஒரு வளாகத்தில் மலாய், சீன மற்றும் தமிழ்ப்பள்ளிகளை உருவாக்குவதுதான் இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கம்.

காலப் போக்கில் இந்த வாவாசான் பள்ளித் திட்ட அமலாக்கத்தில் தொய்வு ஏற்பட்டாலும் இதுவொரு சரியான திட்டம்தான் என்பதை நிரூபிக்கும் வகையில் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. சுபாங் ஜெயா, யு.எஸ்.ஜே. 15 இல் அமைந்துள்ள துன் சம்பந்தன் தமிழ்ப்பள்ளி.

இந்த வாவாசான் பள்ளி வளாகத்தில் 'ப' வடிவில் மூன்று கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரே மாதிரியான தோற்றத்தையும் வசதிகளையும் கண்ட அந்தக் கட்டிடங்களில் மலாய், சீன மற்றும் தமிழ்ப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

நாட்டிலுள்ள மற்ற பள்ளிகளைப் போல் தனித்திராமல் மற்ற மொழிப்பள்ளிகளுடன் இணைந்திருப்பது துன் சம்பந்தன் பள்ளியின் தனிச்சிறப்பு. மற்ற பள்ளிகளுடன் இணைந்திருந்தாலும் கல்வியிலும் புறப்பாட நடவடிக்கைகளிலும் மற்ற பள்ளிகளுக்கு இணையாக அல்லது ஒரு படி உயர்வாக இருப்பதால் இப்பள்ளிக்குக் கிடைத்திருக்கிறது கூடுதல் மதிப்பு.

இன ஒற்றுமை, மொழித் திறனை அதிகரிக்க உதவுகிறது நாட்டில் ஐந்து வாவாசான் பள்ளித் திட்டங்கள் அமல்படுத்தப் பட்டிருந்தாலும் மலாய், சீன மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிப் பள்ளிகளையும் உள்ளடக்கிய ஒரே வாவாசான் பள்ளி இது மட்டுமே ஆகும்.

வாவாசான் பள்ளித் திட்டத்தில் இணைந்துள்ள காரணத்தினால் மற்ற மொழிப் பள்ளிகளுக்குக் கிடைக்கக்கூடிய அனைத்து வசதிகளும் துன் சம்பந்தன் பள்ளிக்கும் கிடைத்து வருவதாகக் கூறுகிறார் பள்ளியின் தலைமையாசிரியர் எம். ஜோன்சன்.

வாவாசான் பள்ளித் திட்டத்தில் எங்கள் பள்ளி இணைந்திருப்பது பல்வேறு கூடுதல் அனுகூலங்களைத் தருகிறது. ஒரே திடல், ஒரே சிற்றுண்டிச் சாலை என்ற கோட்பாடு மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்துறவாடுவதற்கும் இன ஒற்றுமையையும் மொழித் திறனையும் அதிகரிப்பதற்கும் பிற இனக் கலை, கலாசாரங்களை அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்துகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

குளிர்சாதன வசதியுடன் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் கொண்ட நூலகம்,

பதினெட்டு வகுப்பறைகள் மற்றும் இரு பாலர் பள்ளி வகுப்புகளைக் கொண்ட இந்தப் பள்ளியில் 645 மாணவர்கள் பயிலும் வேளையில் அவர்களுக்குப் போதிக்கும் பணியில் 37 ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பள்ளியில் அடிப்படை வசதிகளைப் பொறுத்த தேசியப் பள்ளிக்கு இணையான அனைத்து வசதிகளும் இங்கு உள்ளன. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் கொண்ட குளிர்சாதன வசதி கொண்ட நூலகம், ஆசிரியர் அறை, அறிவியல் கூடம், கணினி மையம், கவுன்சிலிங் அறை உள்ளிட்ட பல வசதிகளை இப்பள்ளி கொண்டுள்ளது.



இந்தப் பள்ளி அடிப்படை வசதிகளில் மட்டுமல்லாது கல்வியிலும் புறப்பாட நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்குகிறது. கடந்த 2015 ஆம் ஆண்டில் 67.0 விழுக்காடாக இருந்த யு.பி.எஸ்.ஆர். தேர்ச்சி விகிதம் கடந்த 2019 ஆம் ஆண்டில் 86.8 விழுக்காடாக உயர்வு கண்டது. அனைத்துப் பாடங்களிலும் ஏ பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை கடந்த 2015 இல் 2 ஆக இருந்த நிலையில் 2019 இல் 8 ஆக உயர்வு கண்டது என்றார் அவர்.

புறப்பாட நடவடிக்கைகளைப் பொறுத்த வரை சீருடை இயக்கத்தில் மாணவர்கள் தீவிர ஈடுபாடு காட்டுவதோடு தேசிய, மற்றும் அனைத்துலக நிலையிலான அறிவியல் போட்டிகளில் வெற்றிகளையும் பெற்றுள்ளனர். இது தவிர, கால்பந்து, ஸ்குவாஷ், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளிலும் மலாய் புதிர்ப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டி, கட்டுரை எழுதும் போட்டி, கதை சொல்லும் போட்டிகளிலும் குறிப்பிடத்தக்க சாதனையை மாணவர்கள் நிகழ்த்தியுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத் திட்டமாக எஸ்.ஜி. அகாடமி எனும் தனியார் துறையுடன் இணைந்து டிரோன் தொழில்நுட்பத்தை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

இப்பள்ளியில் மேலாளர் வாரியம் இல்லாவிட்டாலும் மாணவர்களின் வளர்ச்சிக்குப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் பெரும் பங்கினை ஆற்றி வருகிறது. பள்ளி நிர்வாகத்துடன் அணுக்கமான நட்புறவைப் பேணி வருவதோடு கோவிட்–19 பெருந்தொற்று மற்றும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர்களில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் பல்வேறு உதவிகளை இச்சங்கம் வழங்கியுள்ளது என்றார் அவர்.

பெ.ஆர்.சங்கத்தின் பங்களிப்பு

மாணவர்களின் நலன் மற்றும் அவர்களின் கல்வி வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் தாங்கள் பள்ளி நிர்வாகத்துடன் ஒன்றிணைந்து செயல்பட்டு வருவதாகப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் கே. மகேந்திரன் கூறினார்.

கோவிட்–19 பெருந்தொற்று பரவிய போது வீட்டிலிருந்து இயங்கலை வாயிலாகக் கல்வியைத் தொடர முடியாத நிலையிலிருந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 60 மாணவர்களுக்குக் கணினி, மடிக்கணினி மற்றும் கையடக்கக் கணினிகளை இலவசமாக வழங்கினோம்.

இது தவிர, பெருந்தொற்று காரணமாக வருமானம் இழந்து சிரமத்தை எதிர்நோக்கியிருந்த 120 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்களைப் பல்வேறு கட்டங்களில் வழங்கினோம்.

மேலும், கடந்த 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வசதி குறைந்த 40 மாணவர்களுக்குப் பள்ளிச் சீருடை, புத்தகங்கள் உள்ளிட்ட பொருள்களும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் வாயிலாக வழங்கப்பட்டதோடு மாணவர்கள் நோய்த் தொற்றினால் பாதிக்கப் படாமலிருப்பதை உறுதி செய்யப் பள்ளி முழுவதும் கிருமி நாசினி தெளிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

இப்பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து நிலைநிறுத்தப்படுவதை உறுதி செய்வதற்கான முயற்சியிலும் நாங்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம். இதன் வழி அருகிலுள்ள மற்ற மொழிப் பள்ளிகளுக்கு இணையாக இப்பள்ளியும் தொடர்ந்து உறுதி செய்ய இயலும் என்றார் அவர்.



# ரமலான் பண்டிகை

நோன்புப் பெருநாள் அல்லது ஈகைத் திருநாள் என்பது இஸ்லாமிய இருபெரும் திருநாட்களில் ஒன்றாகும். இஸ்லாமியர்கள் தங்களது புனித மாதமாகிய ரமலான் முழுவதும் நோன்பு நோற்று முடித்ததை அடுத்து இது கொண்டாடப்படுகின்றது. ரமலான் பெருநாள் என்றும் இது அழைக்கப்படுகின்றது.

30 நாட்கள் நோன்பு முடிந்து, 'ஈகைத் திருநாள்' பண்டிகை இஸ்லாமியர்களால் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. புதுத்துணி உடுத்துவது, வகை வகையான உணவுகள் சமைப்பது, ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்வது, நண்பர்கள் மற்றும் உறவினர்களை சந்திப்பது, மற்ற மதத்தை சேர்ந்த நண்பர்களை வீட்டுக்கு அழைத்து ரமலான் விருந்து உபசரிப்பது என இஸ்லாமியர்கள் மிக உற்சாகமாக ரமலான் பண்டிகையைக் கொண்டாடுவார்கள். ரமலான் பண்டிகையின் போது இஸ்லாமியர்கள் வீட்டைச் சுற்றி விளக்குகளை ஏற்றும்போது மிகவும் அழகாக இருக்கும். இந்த பாரம்பரியம் கம்போங்கில் வசிப்பவர்களால் இன்னும் நடைமுறையில் உள்ளது. நகரத்தில் படித்து வேலை செய்யும் இளைஞர்கள் கண்டிப்பாக தங்கள் சொந்தங்களுடன் விடுமுறையை கொண்டாட வீட்டிற்கு செல்வார்கள்.

மேலும், ரமலான் பண்டிகை அன்று, இறந்த குடும்ப உறுப்பினர்கள் இன்னும் நினைவுகூரப்படுகிறார்கள். முழு குடும்பத்துடன் குடும்ப உறுப்பினர்களின் கல்லறைகளுக்குச் சென்று பிரார்த்தனை செய்வார்கள். ரமலான் பண்டிகை அன்று அல்லது சியாவல் மாதம் முழுவதும் திறந்த இல்லம் உபசரிப்பு நடைபெறும். திறந்த இல்லம் இல்லாமல் இது போன்ற கொண்டாட்டங்கள் முழுமையடையாது. திறந்த இல்லம் உபசரிப்புக்கு மற்ற மதத்தை சேர்ந்த நண்பர்களை அழைப்பார்கள். திறந்த இல்லம் உபசரிப்பு பல இன மக்களிடையே நட்பை வலுப்படுத்துவதைக் குறிக்கோளாக கொண்டுள்ளது.

**ஈத் பெருநாள் வாழ்த்துகள்!**



# கோழி ரெண்டாங்

ஹரி ராயா பெருநாளின் போது ரெண்டாங் முக்கிய உணவாகும். இந்த உணவுக்காக, கோழியைக் குறைந்த வெப்பத்தில் தேங்காய் பாலுடன் சமைக்கப்படுகிறது, இது ஒரு நறுமணத்தையும் சுவையையும் தருகிறது. கோழி ரெண்டாங், லெமாங், கேத்துபாட் மற்றும் நாசி இம்பிட் ஆகியவற்றுடன் சாப்பிடச் சுவையானது மட்டுமல்ல, சாதம் மற்றும் ரொட்டியுடன் சாப்பிட சுவையாக இருக்கும்.

இந்தோனேஷியாவில் இருந்து ரெண்டாங் மலேசியாவுக்குக் கொண்டு வரப்பட்டது, இது சிறந்த தேசிய உணவுகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அனைத்துத் திரவங்களும் ஆவியாகும் வரை மசாலா மற்றும் தேங்காய் பாலில் இறைச்சியை வேகவைத்துப் பல மணி நேரம் தயாரிக்கப்படுகிறது.

உண்மையில், ரெண்டாங் சமைப்பது சிக்கலானதாகத் தெரிகிறது, ஆனால் உண்மையில் மிக ருசியான உணவு, ரெண்டாங்கின் முக்கியத் திறவுகோல் என்னவென்றால், எண்ணெய் திரிந்து வரும்வரை வதக்கிய பொருட்கள் சரியாகச் சமைக்கப்பட வேண்டும்.

## கோழி ரெண்டாங் செய்முறை :-



1. உப்பு மற்றும் மஞ்சள் சேர்த்துக் கோழி இறைச்சியைச் சுத்தம் செய்து, உப்பு மற்றும் மஞ்சள் சேர்த்துக் கலந்து, கோழியைப் பாதி வேகும் வரை வறுத்து வைத்துக் கொள்ளவும்.

2. பிறகு, 1 பெரிய வெங்காயம், 8 சிறிய வெங்காயம், 5 பல் பூண்டு, 2 அங்குல இஞ்சி, 3 துண்டு பச்சை மஞ்சள், 2 அங்குல லெங்குவாஸ் மற்றும் செராய் 2 தண்டை நன்றாக அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

3. ஒரு தனிக் கடாயில் எண்ணெயைச் சூடாக்கி, இலவங்கப்பட்டை 2 குச்சிகள், 3 இலவங்கம் மற்றும் 5 ஏலக்காய் சேர்த்து வதக்கவும்.

4. பிறகு 1 அகப்பை அரைத்த மிளகாய் மற்றும் நன்கு அரைத்த பொருட்களைச் சேர்த்து எண்ணெயில் வதக்கவும். அவை சரியாக வேகவைக்கப்பட்டு, எண்ணெய் திரிந்து வரும் வரை மெதுவாகக் கிளற வேண்டும்.

5. வறுத்த பொருளின் நிறம் கொஞ்சம் கருமையாக மாறிய பின் கோழி இறைச்சியைச் சேர்த்து 5–10 நிமிடங்கள் அதில் கிளறி விடவும். இந்தச் செயல்பாட்டின் போது கோழி இறைச்சியை சிறிது தண்ணீர் விட்டு வேகவிடவும்.

6. அதில் கெட்டியான தேங்காய் பால் 1 கப் மற்றும் 1/2 கப் புளி சாறு சேர்க்கவும். ரெண்டாங் கெட்டியாகும் வரை மிதமான தீயில் மெதுவாகக் கிளறவும்.

7. 3 மேசைக் கரண்டி தேங்காய் பூ இளம் சிகப்பாக வருத்து அரைத்த அதனுடன் 2 மஞ்சள் இலைகள் மற்றும் 2 எலுமிச்சை இலைகளைச் சேர்க்கவும் வேகவிட்டு தேவைக்கேற்ப உப்பு மற்றும் சர்க்கரை சேர்த்துக் கொள்ள வேண்டும். சுவையான கோழி ரெண்டாங் தயார்.

# இந்திய சமூகத் தலைவரை அறிவோம்



**டாக்டர் மகேஸ்வரி மணியம்**
**( கின்ராரா தொகுதி)**

கின்ராரா தொகுதியில் நியமிக்கப் பட்டுள்ள இரு இந்திய சமூகத் தலைவர்களில் ஒருவராக விளங்குகிறார் டாக்டர் மகேஸ்ரி மணியம். சமூகவியல் துறையில் பி.எச்.டி. பட்டம் பெற்றவர் இவர் முதல் தவணையாக இந்த சமூகத் தலைவர் பொறுப்பை ஏற்றுள்ளார்.

சமூகத் தலைவர் பதவி அவருக்கு புதிதாக இருந்தாலும் பூச்சோங் நாடாளுமன்ற உறுப்பினர் கோபிந்த் சிங் டியோவின் உதவியாளராக பணியாற்றியதன் மூலம் வட்டார மக்கள் மத்தியில் நல்ல அறிமுகத்தை இவர் பெற்றுள்ளார்.

கோவிட்–19 பெருந்தொற்று உச்சத்தில் இருந்த போது இப்பதவியை ஏற்ற காரணத்தால் பெரிய அளவில் பணிகளை மேற்கொள்ளும் சூழல் ஏற்படாவிட்டாலும் இயன்ற வரை மக்களுக்கு உதவிகள் வழங்கி வந்துள்ளதாக மகேஸ்வரி குறிப்பிட்டார்.

இல்லத்தரசிகள், தனித்து வாழும் தாய்மார்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மலர் அலங்காரப் பயிற்சி, கேக் மற்றும் இனிப்பு வகைகள் செய்யும் பயிற்சி, சமையல் கலை, பிறந்தநாள் பரிசு தயாரிப்பு, முக ஒப்பனை, தையல் கலை, மாணவர் திட்டங்கள், புகைப்படக் கலை உள்ளிட்ட பயிற்சிகள் நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம் என அவர் கூறினார்.

இது தவிர, குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினர் எதிர்கொள்ளும் பொருளாதார மற்றும் குடும்பப் பிரச்சினைகள், வேலையின்மை, மாணவர்களுக்கான கல்வி உதவி ஆகியவற்றோடு வசதி குறைந்தவர்களுக்கு உணவுக்கூடை விநியோகம் போன்ற நடவடிக்கைகளையும் தாங்கள் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கடந்தாண்டு சித்திரைப் புத்தாண்டின் போது "டாப்போர் கின்ராரா" திட்டத்தின் கீழ் 300 சமைத்த உணவுப் பொட்டலங்களை பொதுமக்களுக்கு விநியோகம் செய்தோம். கடந்தாண்டு தீபாவளி பண்டிகையின் போதும் இவ்வாண்டு தைப்பொங்கல் திருநாளன்று இதே திட்டத்தின் கீழ் 300 பேருக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இது தவிர, கடந்தாண்டு டிசம்பர் மாதம் மாநிலத்தில் ஏற்பட்ட மோசமான வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பூச்சோங் மற்றும் தாமான் ஸ்ரீ மூடாவைச் சேர்ந்த மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை விநியோகம் செய்தோம் என்று அவர் சொன்னார்.

கின்ராரா தொகுதி மக்களுக்கு தொடர்ந்து சேவைகளை வழங்கி வருவதில் பூச்சோங் நாடாளுமன்ற உறுப்பினர் கோபிந்த் சிங் டியோ, கின்ராரா சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினருமான இங் ஸீ ஹான் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் ஆகியோர் பெரிதும் துணையாக இருந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

# நாட்டின் பொருளாதாரம் இவ்வாண்டு 5.5 விழுக்காடு உயர்வு காணும்

## உலக வங்கி கணிப்பு




கோலாலம்பூர் :–

மலேசியாவின் பொருளாதாரம் இவ்வாண்டு 5.5 வளர்ச்சி காணும் என உலக வங்கி கணித்துள்ளது. உள்நாட்டு தேவை மற்றும் விரிவாக்கம், நாட்டின் எல்லைகள் திறப்பு ஆகியவை பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்கும் என அது கூறியது.

மின்னியல், மின்சாரப் பொருள்கள் மற்றும் மருத்துவ ரப்பர் கையுறைகள் போன்ற வெளித் துறைகள் இந்த பொருளாதார வளர்ச்சிக்கு துணையாக இருக்கும் என்று அறிக்கை ஒன்றில் அவ்வங்கி தெரிவித்தது.

எனினும், ரஷிய–உக்ரேன் போர், அமெரிக்க பொருளாதார நிலை கடுமையாவது, சீனாவின் கட்டமைப்பு மந்தநிலை போன்ற காரணங்களால் இந்த வளர்ச்சி 4.8 விழுக்காடாக குறைவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் அது குறிப்பிட்டது.

பொருளாதாரம் மீட்சியை நோக்கி பயணிக்கும் என கணிக்கப்பட்டாலும் கோவிட்-19 பெருந்தொற்று, உணவுப் பற்றாக்குறை, வெள்ளம் போன்ற பிரச்னைகள் ஏழைகள் மற்றும் உதவி தேவைப்படுவோரின் மேம்பாட்டில் பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் மதிப்பிடப்படுகிறது. கடந்த 2021 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 3.1 விழுக்காடாக கணிக்கப்பட்ட வேளையில் இவ்வாண்டில் அதன் வளர்ச்சி 5.8 விழுக்காடாக இருக்கும் என்று உலக வங்கி கடந்தாண்டு கணித்திருந்தது.

# வெற்றியைத் தக்கவைக்கப் பாடுபடுங்கள்

## கோம்பாக் கெஅடிலான் தலைவர்களுக்கு கோரிக்கை



கோம்பாக்:–

கோம்பாக் தொகுதி கெஅடிலான் தலைவர்கள் களத்தில் இறங்கி பாடுபட வேண்டும் என்பதோடு மக்களுக்கு உதவுவதற்கான கடப்பாட்டையும் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளனர். மாநில அரசு நிலையிலும் தொகுதி ரீதியாகவும் வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு ஏதுவாக கட்சித் தலைவர்கள் கடுமையாகப் பாடுபட வேண்டும் என்று அவர் கூறினார்.

நாம் ஆற்றுகின்ற பணிகளின் மூலம் வெற்றியும் பெற முடியும். அதே சமயம் அதே பணிகள் நம்மை தோல்விக்கும் இட்டுச் செல்லும். அணுக்கமான நட்புறவை வளர்க்கும் அதேவேளையில் மற்றவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவும் நடந்து கொள்ள வேண்டும். எதிர்கால நலன் கருதி நமது போராட்டத்தை தொடர வேண்டும் என்றார் அவர்.

நாம் அனைவரும் கடுமையாகப் பாடுபட்டால் கோம்பாக் தொகுதியை வெற்றிக்கான முன்னுதாரணமாக நம்மால் உருவாக்க முடியும் என்று அவர் தெரிவித்தார். இங்குள்ள ஸ்ரீ சியாந்தான் மண்டபத்தில் கெஅடிலான் தலைவர்களுடன் நோன்பு துறப்பு நிகழ்வில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார். இந்த நிகழ்வில் சுங்கை துவா, கோம்பாக் செத்தியா, உலு கிள்ளான் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 500 கெஅடிலான் கட்சியின் அடிமட்டத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# கெஅடிலான் கட்சியின் தலைவராக அன்வார் போட்டியின்றி தேர்வு



கோலாலம்பூர்–

ஏற்கனவே கணிக்கப் பட்டதைப் போல் பி.கே.ஆர். கட்சியின் 2022/2025 ஆம் ஆண்டிற்கான தலைவராக டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் போட்டியின்றி தேர்ந்தெடுக் கப்பட்டார்.

அன்வாரின் இந்த வெற்றியை உறுதிப்படுத்திய கட்சியின் பொதுச் செயலாளர் டத்தோஸ்ரீ சைபுடின் நசுத்தி யோன் இஸ்மாயில் இந்த நியமனம் கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் அவருக்கு வழங்கிய மிகப்பெரிய கௌரவமாகும் என்றார்.

கட்சித் தேர்தலில் போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதன் வழி 2018 ஆம் ஆண்டில் ஏற்படுத்திய வரலாற்றை அன்வார் மீண்டும் நிகழ்த்தியுள்ளார். நான் முழு மனதுடன் டத்தோஸ்ரீ அன்வாருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் தனது டிவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். நேற்று நடைபெற்ற கட்சியின் உயர்மட்டப் பதவிகளுக்கான வேட்புமனுத் தாக்கலின் போது இரவு மணி 11.59 வரை அதாவது வேட்பு மனுத்தாக்கல் நேரம் முடியும் வரை அன்வார் மட்டுமே தலைவர் பதவிக்கு மனுத்தாக்கல் செய்திருந்தார்.

# உத்தேச அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், கட்சித் தாவல் தடைச் சட்ட மசோதா

## மே மாதத்திற்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும்

கோலாலம்பூர்–

அரசாங்கம் ஏற்கனவே ஒப்புக் கொண்டதைப் போல உத்தேச அரசியலமைப்புச் சட்ட திருத்தமும் கட்சித் தாவல் தடைச் சட்ட மசோதாவும் வரும் மே மாதத்திற்குள் சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று பக்கத்தான் தலைவர் மன்றம் வலியுறுத்தியுள்ளது.

HARAPAN

நாடாளு மன்றத்தில் இன்று பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் மற்றும் நாடாளுமன்றம் மற்றும் சட்ட விவகாரங்களுக்கான பிரதமர் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் வான் ஜூனைடி துவாங்கு ஜபாருடன் பக்கத்தான் ஹராப்பான் தலைவர்கள் நடத்திய சந்திப்பில் இவ்விவகாரம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் விவாதிக்கப்பட்டதாக தலைவர் மன்றம் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறியது. அந்த சந்திப்பில் அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் மற்றும் கட்சித் தாவல் தடைச் சட்ட மசோதா ஆகிய விவகாரங்கள் முக்கிய இடத்தைப் பிடித்திருந்ததாக அவ்வறிக்கை தெரிவித்தது.

இந்த அறிக்கையில் பிகேஆர் கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம், அமானா கட்சித் தலைவர் முகமது சாபு, ஜசெக தலைமைச் செயலாளர் அந்தோணி லோ சியு பூக், அப்கோ கட்சியின் தலைவர் டத்தோஸ்ரீ வில்ப்ரட் மேடியஸ் தங்காவ் ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof
Hafiz Othaman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat, No.1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor**

*Tel : 03-55234856*
*Faks: 03-55235856*
*Email : info@mediaselangor.com*

# அரசு ஊழியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளத்தை

## வெ.1,800 ஆக நிர்ணயிப்பீர்

### – கியூபெக்ஸ் கோரிக்கை

கோலாலம்பூர்–

அரசு ஊழியர்களுக்கான குறைந்த பட்ச மாதச்சம்பளத்தை 1,800 வெள்ளியாக உயர்த்தும்படி அரசு ஊழியர்கள் தொழிற்சங்கமான கியூபெக்ஸ் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. தொடர்ந்து அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினத்தை சமாளிக்கும் வகையில் நடப்பு சம்பள விகிதம் இல்லாததால் இந்த கோரிக்கையை தாங்கள் முன்வைப்பதாக கியூபெக்ஸ் தலைவர் டத்தோ அட்னான் மாட் கூறினார்.



நடப்பு சம்பள விகிதம் எங்களுக்கு அவ்வளவு மனநிறைவளிப்பதாக இல்லை. தொடர்ந்து அதிகரித்து வரும் பொருள் விலையை சமாளிக்கும் வகையிலும் அந்த வருமானம் இல்லை. ஆகவே, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் சிறிதும் நியாயமானதாக இல்லை என்று அவர் குறிப்பிட்டார். இதன் அடிப்படையில் அரசு ஊழியர்களின் குறைந்த பட்ச சம்பளத்தை 1,800 வெள்ளியாக உயர்த்தும்படி நாங்கள் அரசாங்கத்தை பரிந்துரைக்கிறோம். ஜி.எல்.சி. எனப்படும் அரசு சார்பு நிறுவனங்களில் சம்பள விகிதத்தை அரசாங்கம் 1,500 வெள்ளியாக நிர்ணயித்த போதிலும் நாங்கள் 1,800 வெள்ளி சம்பளத்தை கோருகிறோம் என்றார் அவர்.

நேற்று இங்கு நடைபெற்ற கியூபெக்சின் உச்ச மன்றக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் குறைந்த பட்ச சம்பள விகிதம் வரும் மே 1 ஆம் தேதி தொடங்கி 1,500 வெள்ளியாக நிர்ணயிக்கப்படுவதாக பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் கடந்த மாதம் 19 ஆம் தேதி அறிவித்திருந்தார்.

இந்த புதிய சம்பள விகிதத்தை அமல்படுத்தும் பட்சத்தில் புதிய அரசு ஊழியர்களுக்கும் பழைய ஊழியர்களுக்கும் இடையிலான சம்பள இடைவெளி குறைவதற்கான வாய்ப்பு உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து அரசு ஊழியர்களுக்கும் இரட்டை சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று டத்தோ அட்னான் கோரிக்கை விடுத்தார்.

## கம்போடியாவில் சிக்கிக்கொண்ட மலேசியர்களில் எஞ்சிய நால்வர் தாயகம் திரும்பினர்



கோலாலம்பூர்–

கம்போடியாவில் வேலை வாங்கித் தருவதாக கூறிய கும்பலை நம்பி அந்நாட்டிற்குச் சென்று ஏமாந்து போன 16 மலேசியர்களில் எஞ்சியிருந்த நால்வர் நேற்று தாயகம் திரும்பினர். அந்த நால்வரும் நேற்று மாலை 4.35 மணியளவில் நோம் பென் நகரிலிருந்து கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையம் வந்து சேர்ந்ததாக வெளியுறவு அமைச்சு அறிக்கை ஒன்றில் கூறியது.

அந்நாட்டில் சிக்கிக் கொண்ட இதர 12 பேரும் இம்மாதம் 11 ஆம் தேதி நாட்டிற்கு திரும்பிய நிலையில் கோவிட்–19 நோய்த் தொற்று பாதிப்பு காரணமாக மற்ற நால்வரும் அங்கேயே தங்க வைக்கப்பட்டதாக அமைச்சின் பேஸ்புக் பக்கம் வாயிலாக வெளியிடப்பட்ட அந்த அறிக்கை தெரிவித்தது.

பாதிக்கப்பட்ட அந்த 12 பேரும் பத்திரமாக நாடு திரும்புவதை உறுதி செய்வதில் பெரிதும் துணை புரிந்த கம்போடிய அரசாங்கத்திற்கும் அந்நாட்டிலுள்ள மலேசிய தூதருக்கும் வெளியுறவு அமைச்சு நன்றி தெரிவித்துக் கொண்டது. மோசடிக் கும்பலின் வலையில் சிக்காமலிருக்க இத்தகைய வேலை வாய்ப்புகள் குறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும்படி மலேசியர்களை அந்த அமைச்சு கேட்டுக் கொண்டது.

## சேம நிதி சேமிப்பை திரும்பப் பெற விண்ணப்பிக்கின்ற 59%எம்40 வருமான பிரிவினர்

ஷா ஆலம்–

எம்40 உறுப்பினர்களில் 59 விழுக்காடு ஊழியர் சேம நிதி நிதி (EPF) சேமிப்பை திரும்பப் பெற விண்ணப்பித்துள்ளனர். பி40 பிரிவைச் சேர்ந்த விண்ணப்பங்கள் 55 விழுக்காடாகவும், டி20 பிரிவினர் 39 விழுக்காடாகவும் இருந்ததாக EPF அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

“சம்பள வகைப்பாட்டால் பிரிக்கப் பட்டது, இது தகுதியான பி40 உறுப் பினர்களில் 55 விழுக்காடு (RM1,700 க்கும் குறைவான வருமானம்), எம்40 உறுப்பினர்களில் 59 விழுக்காடு (RM1,701 RM4,900), டி20 உறுப்பினர் களில் 39 விழுக்காடு (RM4,900க்கும் அதிக வருமானம்) மற்றும் 29 விழுக்காடு முறைசாரா மற்றும் இப்பொழுது சந்தா செலுத்தாத உறுப்பினர்களும் விண்ணப்பிக்கிறார்கள், ”என்று அவர் கூறினார். அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் மலாய்க்காரர்கள், 65 விழுக்காட்டினர், சீனர்கள் (12 விழுக்காடு) மற்றும் இந்தியர்கள் (7 விழுக்காடு) மற்றும் 17 விழுக்காட்டினர் சபா மற்றும் சரவாக் பூமிபுத்ராக்கள் மற்றும் குடிமக்கள் அல்லாதவர்கள் என்று EPF தெரிவித்துள்ளது. இந்த வசதிக்காக விண்ணப்பித்த உறுப்பினர்களின் கருத்துகளின் அடிப்படையில், மூன்று முக்கிய காரணங்களில் வருமானம் (24 விழுக்காடு), நிதி ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள மனைவி அல்லது கணவன் மற்றும் குடும்ப உறுப்பினருக்கு உதவுவது (23 விழுக்காடு) மற்றும் இதரவித நிதி முதலீடுகளை அதிகரிப்பது (14 விழுக்காடு) ஆகியவை அடங்கும்

## ஓப்ஸ் ஹரி ராயா: முக்கிய ஐந்து குற்றங்களுக்கு அபராதம் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும்

புத்ராஜெயா–

இந்த முறை பண்டிகைக் காலத்தில் ஐந்து போக்குவரத்து விதிமீறல்களுக்கு அபராதத்திற்கு அனுமதிக்கப்படவில்லை, அவை நீதிமன்றத்தில் தீர்க்கப்பட வேண்டும் என்று போக்குவரத்து அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் வீ கா சியோங் கூறினார். அவசர பாதையில் வாகனம் ஓட்டுதல், வாகனம் ஓட்டும் போது கைத் தொலைபேசியைப் பயன்படுத்துதல், சிவப்பு விளக்கை மீறுதல், வரிசையை தவிர்க்க இடையில் நுழைவது மற்றும் வேக வரம்பை மீறி வாகனம் ஓட்டுதல் ஆகியவை ஐந்து போக்குவரத்து விதிமீறல்கள் ஆகும். அதுமட்டுமின்றி, ஹரி ராயா பெருநாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பும், இரண்டு நாட்களுக்குப் பிறகும், ஏப்ரல் 30 முதல் மே 2 வரை, மே 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தடை அமல்படுத்தப்படும் என்று கா சியோங் கூறினார்.

இலகுரக வாகனங்களுடன் கனரக வாகனங்கள் கலப்பதால் ஏற்படும் சாலை விபத்துகளின் அபாயத்தைத் தவிர்க்கவும், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.




கா சியோங் கூறுகையில், சாலைப் போக்குவரத்துத் துறையிலிருந்து (ஜேபிஜே) மொத்தம் 2,200 அமலாக்கப் பணியாளர்கள் ஹரி ராயா பெருநாள் ஓப்ஸில் ஈடுபடுத்தப்படுவார்கள், விரைவுப் பேருந்து பயணிகளைப் போல மாறுவேடமிட்டு, நெடுஞ்சாலையில் உள்ள 14 மைய இடங்களில் அமலாக்க நிலையங்கள் (இபிஎஸ்) மூலம் கண்காணிப்பார்கள்.

விரைவுப் பேருந்துகள் எப்போதும் ‘சாலை தகுதி’ அல்லது தகுதியான நிலையில் இருப்பதை உறுதி செய்வதற்காக, நாடு முழுவதும் உள்ள 75 டிப்போக்கள் மற்றும் 28 முக்கிய பேருந்து முனையங்களில் ‘ப்ரா ஓப்ஸ் ஹரி ராயா’ மூலம் எக்ஸ்பிரஸ் பேருந்துகளின் ஆய்வு ஏப்ரல் 25 முதல் 28 வரை தொடங்கும் என்றார்.

தொழிலாளர் தினச் சிறப்பு கட்டுரை

# " முதலாளிகளின் தோழனாக செயல் பட்டு பாட்டாளிகளை கைவிட்ட கூட்டணி பாரிசான் நேஷனல் அரசு "

மலேசியத் தொழிலாளர் தினம், மற்ற எந்த மலேசியத் இனத்தையும் விட மலேசிய தமிழர்களுக்கு மிகப் பொருள் நிறைந்த தினம் என்றால் அது மிகையாகாது. இந்நாட்டில் வாழும் தமிழர்கள் பெரும்பாலும் 5ம் அல்லது 6 ம் தலைமுறை தமிழர்கள். ''தமிழ் கூலிகளின் வழித்தோன்றல்கள்'' சொந்த இனத்தால் நாம் காட்டிக் கொடுக்கப்பட்டோம் மற்றவர்களால் வஞ்சிக்கப்பட்டோம்.

இங்கு இன்று நமது பிள்ளைகளுக்கும், நம்மில் பலருக்கும் நமது பூர்வீகம் மிக மேலோட்டமாகவே தெரியும். அதனால் நம் மூதாதையர் சிக்கிய வலையில் நாமும் சிக்கிச் சீரழிவதைப் பலர் உணரவில்லை..

## முதல் ஏமாற்றம்

1800 ஆம் ஆண்டுக்கு முன்பு மலாயா ஒரு பண்படுத்தப்படாத பூமி, இங்கு வந்து அள்ளிச் செல்ல எதுவுமில்லை, அதனால் ஆரம்பத்தில் இந்தியர்களைக் குறிப்பாக தமிழர்கள் அழைத்து வரப்பட்டார்கள் என்பதை விட பிடித்து வரப்பட்டார்கள் அல்லது கடத்தி கட்டாயப்படுத்தி வேலை வாங்கப்பட்டார்கள் என்பதே சரியான பதமாக இருக்கும்.

அப்பொழுது ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டதால் அந்த நாட்டை மட்டும் கொள்ளையிடவில்லை ஆயிரக்கணக்கான தமிழர்களை அவர்களின் பொருளாதாரப் பசிக்குத் தென் ஆப்பிரிக்கா, பர்மா, பினாங்கு, சிங்கப்பூர் மற்றும் மலாயாவில் காவு கொடுத்தனர்.

அவர்கள் தமிழ் சமுதாயத்திற்கு செய்த கொடுமைக்கு, பட்ட கடனை இன்று வரை தீர்க்க முன்வரவில்லை. நம் முன்னோர்களின் உழைப்பால் உயர்ந்த இந்தத் தேசமும் அதற்கான நன்றிக் கடனை செலுத்தத் தவறி விட்டது..

.அமெரிக்காவில் 1865ல் அடிமை ஒழிப்புக்குப் பின் ஆங்கிலேயர்கள் தங்கள் காலணிகளில் பணியாற்ற மனிதர்களைக் கடத்தும் முறையை மாற்றிக் கொண்டார்கள்.

அதற்கு மாறாக மண்டோர் மற்றும் கங்காணி முறையில் தமிழர்கள் தோட்டங்களில் வேலைச் செய்யக் கூட்டிவந்த கதைகளைத்தான் இப்பொழுதும் பாடப் புத்தகங்களில் படிக்கிறோம், ஆனால் கடத்தி வந்து அடிமையைப் போல் வேலை வாங்கிக் கொன்ற சம்பவங்கள் எல்லாம் நம் பாட்டி, தாத்தாக்கள் வாய்வழிப் பகிர்ந்ததை பலர் அறிந்திருக்கவில்லை, அக்கறை காட்டுவதில்லை.

ஆனால், ஆங்கிலேயர்கள் தமிழ்த் தொழிலாளர்களை நடத்திய விதம் ஊதியத்தில் காட்டிய பாகுபாடுகள். மிக மோசமான குடியிருப்புகள், நீண்ட வேலை நேரங்கள் அனைத்தும் அப்பட்டமான சுரண்டல், மனித உரிமை மீறல்.

இந்தியாவிலிருந்து தமிழ்த் தொழிலாளர்களை வேலைக்கு கொண்டுவரக் கங்காணிகள் முறை அமல் படுத்தப்பட்ட உடன் தோட்டங்களில் தொழிலாளர் சுரண்டலை, நம்மவர்களை கொண்டே ஆங்கிலேயத் துரைமார்கள் நடத்தினர்.

நீண்ட (14 மணி) நேர கடின வேலை, ஆனால் அதற்கு குறைந்த ஊதியம், அதனால் 80 விழுக்காடு தொழிலாளர்களுக்கு கிட்டியது அரை வயிற்றுக் கஞ்சி, அந்த நிலையில் அவர்களின் பிள்ளைகள் நிலை எப்படி இருக்கும், தோட்டங்களில் 40 விழுக்காடு பிள்ளைகள் சத்து குறைவால் பாதிப்புகள். அதிகமான இளம் வயது மரணங்கள். தோட்டப் பெண்களுக்கு பாலியல் தொல்லை, மனைவிக்கு வேலை ஆனால் தோட்டத்தில் வேலை செய்யாத கணவன்களுக்கு தோட்டத்தில் நுழைய அனுமதி மறுப்பு, பிள்ளைகளுக்கு ஒழுக்கான கல்விக்கு வழியில்லை, வீடுகளுக்கு குடிநீர் வழங்குவதில்



தடை, அரிசி ரேஷன் நிறுத்தம் இப்படியான கொடுமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். தோட்டத் தொழிலாளர்கள், ஆங்கிலேய முதலாளிகளையும் ஆசிய மண்டோர்களையும் வெறுக்க இதுவே வழி வகுத்தது. தொழிலாளர்கள் அவர்களின் உரிமைக்குக் குரல் கொடுக்கத் தொழிற்சங்கங்களை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டார்கள். ஆனால் முதலாளிகளுக்கு ஆதரவான சங்கம் என்றால் அது இயங்க தடையில்லை. தொழிலாளர் உரிமைக்கு குரல் கொடுத்தால் அவை கம்யூனிஸ்டுகள்.

தோட்டத் தொழிலாளர்களின் வெறுப்பின் உச்சக்கட்டமே, பெரிய எண்ணிக்கையிலான இந்தியத் தொழிலாளர்கள் ஜப்பானியப் படையெடுப்பினையும், சுபாஷ் சந்திரப் போஸின் ஐ.என்.ஏ இயக்கத்தை மலாயாவில் ஆதரித்தது.

## சுதந்திர மலாயா - சுதந்திரமற்ற தொழிலாளர்கள்

இரண்டாம் உலகப் போருக்குப் பின் தோட்டங்களுக்குத் திரும்பிய ஆங்கிலேய முதலாளிகள் மீண்டும் தங்கள் தொழிலாளர் சுரண்டல் வழி, தொழிலாளர் விரோதப் போக்கினைத் தீவிரப்படுத்தினர், தேசியத் தோட்டத் தொழிற்சங்கமும் துரை மார்களுக்கு துணையாக நின்றதால், பல தோட்டங்களில் தொழிலாளர்கள் மாற்று தொழில் சங்கங்களை அமைத்தனர்.

ஆனால் சுதந்திர மலாயாவிலும் தொழிலாளர் விரோதப் போக்கு தொடர்ந்தது. தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அரசோ, தொழிற்சங்கமோ கண்டு கொள்ளவில்லை. வெறுப்பின் உச்சத்தில் 1965ம் ஆண்டில் புக்கிட் அசகான் தோட்டத்துப் பல இனத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ஐக்கியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தை அமைத்தனர்..

தொழிலாளர்கள் முன் வைத்தது, சாதாரணக் கோரிக்கைகள், அதனைத் தொடர்ந்து அலட்சியம் செய்து வந்த தோட்ட நிர்வாகத்தின் போக்கு குறித்து ஐக்கியத்

தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் வழி அன்றைய தொழிலாளர்களின் அமைச்சர் மாணிக்க வாசகத்தை அணுகியது. தோட்ட நிர்வாகத்தைப் பணிய வைக்கத் தொழிலாளர்களின் பலத்தைக் காட்டுமாறு அமைச்சரே ஆலோசனைக் கூறினார்.

அதன்படி தொழிலாளர்களின் வேலை நீக்கத்தை எதிர்த்து குரல் கொடுத்த ஐக்கியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் இரு தலைவர்களும் வேலை நீக்கம் செய்யப் பட்டனர். ஆனால் இந்த அநீதிகள் குறித்து மலாக்கா தொழிலாளர் துறைக்குத் தெரிவிக்கப் பட்டும் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையில், இடைக்காலத் தொழிலாளர் அமைச்சரான துன் சம்பந்தனிடம் இந்த விவகாரம் கொண்டு செல்லப்பட்டது. அதனால் எந்தப் பயனும் இல்லை .தோட்ட நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு வரவே இல்லை.

அரசாங்கம், இந்திய அமைச்சர்கள், தொழிற்சங்கம், தொழிலாளர் இலாகா என்று அனைவரும் கைவிட்ட நிலையில், அமைச்சரின் ஆலோசனைக்கு ஒப்ப நடந்தும் வேலை இழந்த தொழிலாளர்களின் பிரச்சனைக்கு சரியான தீர்வு தான் என்ன ?

எப்படி வரும் ? முதலாளிகள் புரிந்த அத்தனை அட்டூழியங்களையும் , கொடுமைகளையும் ஏற்றுக்கொண்டு, சுதந்திர மலாயாவில் உழைப்பாளிகள் வாழ்க்கையைத் தொடர முடியாது. அப்படிப்பட்ட அவல நிலையில் தோட்டத் தொழிலாளர்கள்.

ஆம், முதலாளிகளிடையே செய்துக் கொண்ட ஒப்பந்தப்படி, ஒரு தோட்டத்தில், தொழிற்சங்க மற்றும் தொழில்துறை போராட்டங்களில் ஈடுபட்டு வெளியேற்றப்படும் தொழிலாளர்கள் இன்னொரு தோட்டத்தில் வேலை கொடுக்கப்படாது. அதனால், நெஞ்சில் ஈரமுள்ள சில சமூக வாதிகள், தொழிலாளர்கள் மீது இரக்கம் கொண்ட பல அமைப்புகள் உதவ முன்வந்தன.

## " நீதி கேட்டு நெடும் பயணம் "

தோட்டத்துக்கு உள்ளேயே குடிகொண்டிருந்த போராட்டத்தைக் கோலாலம்பூரில் அமைந்துள்ள தோட்ட நிர்வாகத்தின் தலைமைக்கு எடுத்துச் செல்வது என்று தீர்மானித்தனர்.

தொழிலா ளர்களின் '' நீதி கேட்டு நெடும் பயணம் தொடர முடியாத படி பல தடைகள் பல கைதுகள் அடி, உதை, பசி, பட்டினி அவர்கள் மீது திணிக்கப்பட்டது. தொழிலாளர்களின் வேலை நீக்கத்தை கண்டு கொள்ளாத அரசாங்கம், தொழிலாளர்களின் நெடும் பயணத்தை தடுக்க எத்தனை போலீஸ், எத்தனை வழக்கு, எத்தனை கைது ?

தொழிலாளர் களுக்காக வாதிட்ட கரம் சிங் என்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமை போராட்ட வாதிக்கு விசாரணை அற்ற 24 ஆண்டுகள் சிறைத் தண்டனை. அவருடன் பல தொழிலாளர்கள் ,தொழிற்சங்கவாதிகள். தொழிலாளர்களின் அனுதாபிகளும பல ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டனர்.

கடந்த 250 ஆண்டுகள் அத்தனை கொடுமைகளையும் ஏற்றுக் கொண்ட போராட்டவாதிகள், தோட்டத் தொழிலாளர்கள், அவர்கள் படிப்படியாகச் சேர்த்ததே இன்றைய தொழிலாளர் உரிமைகள். அவர்கள் நமக்காக செய்த தியாகமே , இந் நாட்டில் இன்றைய சமுதாயம் அனுபவிக்கும் அத்தனை சுகங்களும், சொகுசான வாழ்வும்.

நாட்டில் தீர்க்க முடியாத பிரச்சனை எதுவுமே இல்லை. ஆனால் தீர்வு காண வேண்டும் என்ற உணர்வு உள்ள அமைச்சர்கள், அரசியல்வாதிகள், முதலாளிகளுக்கு தான் இங்கு பஞ்சம்.

தோட்டத் தொழிலாளர்களும் உணர்வும், உயிரும் உள்ள ஜீவன் என்பதைக் கூட மறந்து செயல்படும், அரசியல்வாதிகளையும் , அமைச்சர்களையும் இன்றும் நாம் காண வேண்டியிருப்பது துர்பாக்கியமே.



சுதந்திர மலாயாவில் தோட்டத்தொழிலாளர்கள் தொழில் துறை போராட்டங்களுக்காகச் சிறை சென்ற புக்கிட் அசாகான் தோட்டச் செயல் வீரர்கள் பலரில் படம் கிடைத்த சிலர் முறையே யா ஆ ஹெறங், இப்ராஹிம் ஐந்தான், S.N ராஜா , லிம் ஜோ, நகராஜ௳, அகமத்

அரசே தோட்டத் தொழிலாளர்களின் கடும் ஏழ்மைக்கு காரணம்,




# கம்போடியாவில் அடுத்தாண்டு நடைபெறும் 40 சீ போட்டியில் விளையாட்டுகள் இடம் பெறும்

கோலாலம்பூர்–

தென்கிழக்காசிய நாடுகள் பங்கேற்கும் சீ போட்டியில் 40 வித விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்ததன் மூலம் கம்போடியா புதிய சாதனையைப் படைத்துள்ளது. அடுத்தாண்டு நடைபெறவிருக்கும் 32வது சீ போட்டிக்கான உபசரணை நாடான கம்போடியா தனது நாட்டின் தேசிய தற்காப்பு கலையான குன் போக்கத்தோர் போட்டியையும் இப்போட்டி பட்டியலில் இணைத்துள்ளது.

சீ போட்டி கடந்த 1977 ஆம் ஆண்டில் தொடங்கியது முதல் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக போட்டிகளை ஏற்பாடு செய்த நாடாக கம்போடியா விளங்குவதாக தென்கிழக்காசிய விளையாட்டு சம்மேளனம் அறிக்கை ஒன்றில் தெரிவித்தது.

சீலாட் கலையை சேர்ப்பதற்கு செய்யப்பட்ட விண்ணப்பத்தை வரும் ஜூன் கூடும் தென்கிழக்காசிய விளையாட்டு சம்மேளனம் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கம் போல் தடகளப் போட்டிகளும் நீர் சார்ந்த விளையாட்டுகளும் இப்போட்டியை ஆக்கிரமித்துள்ள வேளையில் இவ்வாண்டு வியட்னாமில் நடைபெறும் சீ போட்டியில் விடுபட்ட நீர் போலோ விளையாட்டுக்கும் கம்போடியா வாய்ப்பளித்துள்ளது.

# சுக்மா 2022- 800 சிலாங்கூர் விளையாட்டாளர்கள் 31 விளையாட்டுகளில் பங்கேற்பர்



ஷா ஆலம்–

கோலாலம்பூரில் வரும் செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 8 ஆம் தேதி வரை நடைபெறவிருக்கும் 2022 ஆம் ஆண்டிற்கான மலேசிய விளையாட்டுப் போட்டியில் (சுக்மா) சிலாங்கூர் மாநிலத்தைப் பிரதிநிதித்து 800 விளையாட்டாளர்கள் 31 விளையாட்டுகளில் பங்கேற்பர்.

எனினும், சுக்மா நுட்பக் குழுவின் ஆய்வுக்குப் பின்னரே விளையாட்டாளர்களின் எண்ணிக்கை முடிவு செய்யப்படும் என்று சிலாங்கூர் மாநில விளையாட்டு மன்றத்தின் (எம்.எஸ்.எம்.) நிர்வாகத் தலைவர் முகமது நிஸாம் மர்ஜூக்கி சிலாங்கூர் கினியிடம் கூறினார்.

இதன் தொடர்பான முடிவை சுக்மா நுட்பக் குழு நோன்புப் பெருநாளுக்குப் பின்னர் வெளியிடும். தற்போது அனைத்து விளையாட்டாளர்களும் தராவே தொழுகைக்குப் பின்னரும் வார இறுதி நாட்களிலும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார் அவர்.

அண்மைய ஆண்டுகளில் போட்டிகள் எதுவும் நடைபெறாததால் விளையாட்டாளர்களின் தரம் முந்தைய சுக்மா போட்டி அல்லது தேசிய நிலையில் அடையப்பட்ட சாதனையை அடிப்படையாக கொண்டு தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு சுக்மா போட்டியில் குறைந்தது 60 தங்கப் பதக்கங்கள் பெற்று மூன்றாம் நிலையைப் பெறுவதற்கு சிலாங்கூர் இலக்கு கொண்டுள்ளது.

கோவிட்–19 பெருந்தொற்று பரவல் காரணமாக கடந்த ஈராண்டுகளாக ஒத்தி வைக்கப்பட்ட 20 ஆவது சுக்மா போட்டி இம்முறை கிள்ளான் பள்ளத்தாக்கில் நடைபெறுகிறது.

# அமைச்சரே அடிப்படை சம்பளத்தை மறுப்பதா!!



▲ ஜெஸ்தின் ராஜ்

புத்ராஜெயா :–

மே 1–ம் தேதி முதல் RM1,500 குறைந்தபட்ச ஊதிய விகிதம் அமலுக்கு வரும்போது, முறைசாரா துறை உட்படப் பல வேலைவாய்ப்புத் துறைகளுக்கு நெகிழ்வுத்தன்மை அளிக்கப்படும் என்று மனிதவள அமைச்சர் டத்தோஸ்ரீ எம்.சரவணன் தெரிவித்தார்.

சட்டம் (சட்டம் 732) இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதியம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று கூறுகிறது. அதைச் செய்யாவிட்டால், சட்டத்தை மீறியதாக மக்கள் அவரை விமர்சிப்பார்கள், "என்கிறார். இப்படிக் கூறிவிட்டு சில துறைகளுக்கு நெகிழ்வு தன்மை என்ற போர்வையில் சில அடிப்படை சம்பளத்தை அவரே மறுப்பதேன்? என்று கெஅடிலான் தேசிய இளைஞர் பகுதி அறிய விரும்புவதாக அதன் தேசிய உதவித்தலைவர் ஜெஸ்தின் ராஜ் கேட்டார்.

பாரிசான் ஆட்சியில் நீண்ட காலமாக தோட்டத் தொழிலாளர்கள் தேசிய வளர்ச்சி மற்றும் ஊதியத் திட்டங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டதின் விளைவே இந்தியச் சமுதாயத்தின் இன்றை ஏழ்மை நிலை.

அமைச்சரின் கூற்று நாட்டு மக்களில் ஒரு பகுதியினரை பொருளா தாரத்தில் தாழ்த்த வில்லை, உணவு சட்டியில் துளை போடும் கைங்காரியம். ஒரே நாட்டில் இரு விதக் கொள்கை இரு வித நீதி என்பதே பாரிசானின் சித்தாந்தம். இரட்டை வேடம் அவர்களுக்கு புதியதல்ல.

(ம.இ.கா அமைச்சர்களின் அவலட்சனத்தை புக்கிட் அசாகான் பக்கம் 15 காணலாம்) அடிப்படை சம்பளம் என்பதின் அர்த்தம் தெரியாமல் அமைச்சர் அறிக்கை விடுவது அதை விட கேவலம் என்றார் அவர்.

அடிப்படை ஊதியமாக ரி.ம1500யை நிர்ணயித்தது அரசாங்கம். உயர்ந்து வரும் விலைவாசிகள் மற்றும் இன்றைய வாழ்க்கை சூழலைச் சமாளிக்க மிக–மிக அவசியமான ஒரு தொகை. முதல் ஆண்டு அடிப்படை சம்பளமான 1500 கொடுக்க முடியாத ஒரு நிறுவனம் மறு ஆண்டு கொடுக்குமா? அதற்கு என்ன உத்தரவாதம்? என்று கேட்டார் ஜெஸ்தின் ராஜ்

இப்படிப்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களை ஏமாற்ற அமைச்சர் உடந்தையாக இருக்கக் கூடாது. தொழிலாளர்கள் உழைப்புக்கு ஊதியம் வழங்க முடியாத நிறுவனங்கள் செயல்படுவதில் எவருக்கு என்ன இலாபம். முன்னால் பிரதமர் நஜிப்பின் தவறான பொருளாதாரச் சுருட்டல் கொள்கையால் ஒன் எம்டிபி போன்ற பல முறைகேடுகளில் நாடு பில்லியன் கணக்கான வெள்ளிகளை இழந்துள்ள வேளையில்.

ஏன் தொழிலாளர்களின் நல்வாழ் வுக்காக ஆண்டுக்கு 5 பில்லியனை ஒதுக்கக் கூடாது?

சுமார் 1.2 மில்லியன் தொழிலாளர்களுக்கு மாதம் 350 வெள்ளி ஊதிய உதவியாக வழங்கினால் கூட 10 ஆண்டுகளுக்குப் பாவப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப் போதுமான தொகை 50 பில்லியன், அவ்வளவு பெரிய தொகையை சர்வசாதாரணமாக கடலில் கரைத்த பாரிசான் நேஷனல் அரசாங்கத்தின் பங்காளியான ம,இ,கா சரவணன், துண்டுவிழும் ஊதியத்தை அரசாங்கமே பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு வழங்க அமைச்சரவையில் குரல் கொடுக்க வேண்டும், உழைக்கும் வர்க்கத்தின் வயிற்றில் அடிக்கக்கூடாது என்றார் ஜெஸ்தின் ராஜ்.

Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor.
Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lo2 2, Jalan Sepana 15/3, off persiaran Selangor Seksyen 15, 40200 Shah Alam, Selangor.